இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 03 | திகதி : 09.03.2025 | விலை : 50.00

## எதிர்நோக்கின் திருப்பயணிகளாக மனமாற்றப் பாதையில் பயணிப்போம்

### தவக்காலச் சுற்றுமடலில் யாழ் மறைமாவட்ட ஆயர்



இறைவனின் அன்பு கடந்த இரக்கத்தைப் பிரதிபலிக்கும் யூபிலி ஆண்டின் இத்தவக்காலத்தில், நாம் பாவ வாழ்விலிருந்து விடுபட்டு, எதிர்நோக்கின் திருப்பயணிகளாக ஒருமித்து, கிறிஸ்துவின் ஓர் உடலாகப் பயணிக்க வேண்டுமென யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் வெளியிட்டுள்ள தவக்காலச் சுற்றுமடலில் அழைப்பு விடுத்துள்ளார்.இச்சுற்றுமடலில், தவக்காலத்தில் நாம் செய்ய வேண்டிய நற்செயல்களான இறைவேண்டல், நோன்பு, ஈகை போன்ற விடயங்களைச் சுட்டிக்காட்டி நாம் பின்பற்றவேண்டிய முக்கியமான விடயங்களையும் விபரித்துள்ளார்.அத்துடன் உலக ஆயர்கள் மாமன்ற கூட்டொருங்கியக்க மாநாட்டின் இறுதி ஏட்டின் செயலமர்வில் நாம் எட்டிய முடிவுகளை செயற்படுத்த பங்குத்தந்தையர்களுக்கு ஆதரவு நல்கும் படியும் திருத்தந்தையின் உடல் நலனிற்காக இறைவனிடம் மன்றாடும் படியும் கேட்டுக்கொண்டுள்ள ஆயர் அவர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் நாம் பொறுமையுடன் எமது தீர்க்கமான முடிவை வெளிப்படுத்த ஒன்றுபட வேண்டுமெனவும் அழைப்புவிடுத்துள்ளார். ஆயரின் முழுமையான தவக்காலச் சுற்று மடலை பக்கம் மூன்றில் காண்க.

## சிவகங்கை மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை லூர்த்து ஆனந் ஆண்டகையின் தலைமையில் கச்சதீவுத் திருவிழா





கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல வருடாந்தத் த்திருவிழாவானது இம்மாதம் 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 15ஆம் திகதி திருவிழாவுடன் நிறை வடையவுள்ளதாக் கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல ப்பரிபாலகரான அருட்பணி பத்திநாதன் அடிகளார் தெரி வித்துள்ளார். எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை 04.00 மணிக்கு கொடியேற்றமும் தொடர்ந்து திருச்செபமாலை இடம்பெற்று மாலை 04.50 மணிக்கு திருச்சிலுவைப்பாதையும் இடம் பெறவுள்ளது. மேலும் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட் கலாநிதி ப.யோ. ஜெபரெட்ணம் அடிகளார் தலைமையில் நற்க ருணைப் பெருவிழா இடம்பெறவுள்ளது. மறுநாள் காலை 05.45 மணிக்கு திருச்செபமாலையும் காலை 07.00 மணியளவில் சிவகங்கை மறைமாவட்ட **ஆயர் பேரருட்தந்தை லூர்த்து ஆனந்** ஆண்டகையின் தலைமையில் பெருவிழா கூட்டுத்திருப்பலியும் புனிதரின் திருச்சூருப ஆசீரும் வழங்கப்படவுள்ளது. கச்சதீவு திருவிழாவில் இம்முறை இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து சுமார் 9000 ப.2

## பொதுநிலையினர் திருஅவைப் பணிகளில் ஈடுபட அதிக வாய்ப்பு

### வலியுறுத்துகிறது கூட்டொருங்கியக்க இறுதி ஆவணம்




திரு அவையில் பல முக்கியமான பொறுப்பு வாய்ந்த பணிகளுக்கு பொதுநிலையினர் நியமிக்கப்பட வேண்டும் என்று கூட்டொருங்கியக்க மாநாட்டின் இறுதி ஆவணம் வலியுறுத்தி நிற்கிறது.

**இவை பற்றி இவ் ஆவணத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:**


1. திருஅவையின் தேர்ந்து தெளிதல் மற்றும் தீர்மானங்கள் எடுத்தல் ஆகியவற்றில் பொதுநிலையினரின் அதிக பங்களிப்புத் தேவை.
2. மறை மாவட்டங்களில் உள்ள நிறுவனங்கள், குரு மடங்கள், இறையியல் கல்லூரிகள் போன்றவற்றில் பொதுநிலையினர் அதிகமாக உள்வாங்கப்பட வேண்டும்.
3. பொதுநிலையினர் தமது ஆற்றல்களை அருங் கொடைகளைப் பயன்படுத்துவதற்கு உற்சாகம் அளிக்கப்பட வேண்டும்.
4. திரு அவையின் நீதிமன்றங்களில் பணி புரிவதற்காக பொதுநிலையினர் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.
5. திருஅவையில் பணியாற்றும் பொது நிலையினரின் மாண்பும் உரிமையும் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

## தேவையிலுள்ள திருஅவைக்கான தொண்டு நிறுவன ஆசியப்பிராந்தியத் தலைவர் யாழ் ஆயர் சந்திப்பு



தேவையிலுள்ள திருஅவைக்கான ( **Church in Need**) ஜேர்மன் கத்தோலிக்க தொண்டு நிறுவன ஆசியப் பிராந்திய தலைவர் பார்பறா றெற்றிக் அவர்கள் யாழ் மறைமாவட்டத்திற்கு வருகைதந்திருந்தார். இவ்நிறுவன அனுசரணை மூலம் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப்பணிகளை மேற்பார்வை செய்யும் நோக்கிலேயே இவ்வருகை அமைந்தது. யாழ். மறை மாவட்டத்தின் பல பங்குத்தளங்களையும் நிறுவனங்களையும் அவர் பார்வையிட்டுள்ளார். யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களையும் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் கடந்த 05ஆம் திகதி சந்தித்து க்கலந்துரையாடினார்.

## கலை பண்பாட்டு பேரணியோடு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் பிறப்பின் முப்பொன் விழா அங்குரார்ப்பணம்



நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன் விழாவை இவ்வாண்டு கொ ண்டுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இளையோர் மத்தியில் அடிகளாரின் பல்து றைசார் பணிகளை அறியச் செய் வதை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாண மறை மாவட்டம், யாழ் ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ். அமலமரித்தியாகிகள் மாகாணம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து இவ்விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. இதன்தொடக்க நிகழ்வானது இம்மாதம் 13ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லூர் சுவாமி ஞா னப்பிரகாசர் வளர்ந்த ஊராகிய அச்சுவேலியில் கலாசாரப் பவனியுடன் ஆரம்பமாகவுள்ளது. அன் றைய தினம் காலை 8.30மணிக்கு அச்சுவேலி பேருந்து நிலையத்திலிருந்து கலாசாரப் பவனி ஆரம் பிக்கப்பட்டு புனித திரேசாள் பாடசாலையில் அரங்க நிகழ்வுகளுடன் நிறைவடையவுள்ளது.முப்பொன் விழாவின் தொடர் செயற்பாடுகளாக பாட சாலை மட்டத்தில் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மற்றும் ஆய்வரங்கம் ,ஆய்வுநூல் வெளியீடு,மலர் வெளியீடு, நிறைவு விழா போன்ற பல்வேறு செயற் பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மட்டப் போட்டிகளுக்குப் பொறுப்பாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், ஆசிரிய ஆலோசகர் யோ. யோண்சன் ராஜ்குமார், அருட்பணி. சூ. யே. ஜீவரட்ணம், ப.2

## கிழக்கு அரியாலையில் அன்னை வேளாங்கண்ணிக்குப் புதிய ஆலயம்



யாழ் மறைமாவட்டம் மணியந்தோட்டம் பங்கிற்குட்பட்ட கிழக்கு அரியாலைப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த புனித வேளாங்கண்ணி அன்னை யாத்திரைத்தலக் கட்டுமானப்ப ணிகள் நிறைவடைந்த நிலையில் அவ்வாலயத் திறப்புவிழாவும் வருடாந்தத் திருவிழாவும் கடந்த 02ஆம் திகதி நடைபெற்றன. மணியந்தோட்டம் பங்குத்தந்தை அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை வரதன் குறுஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்துத் திருவிழா திருப்ப லியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம், அருட்தந்தையர்கள், இறைமக்களெனப் பலரும் கலந்து செபித்தனர். யுத்தத்தினால் சேதமடைந்த இவ் ஆலயத்திற்கான அடிக்கல் யாழ். மறைமாவட்ட நிதி முகா மையாளர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களால் கடந்த 2024ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் திகதி நாட்டப்பட்டு அவரது கண்காணிப்பின் கீழ் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதுடன் இக்கட் டுமானப்பணிக்கான பெரும் நிதிப் பங்களிப்பினை யாழ். மறைமா வட்ட ஆயர் அவர்களும் மீதித்தொகையினை உள்நாட்டு மற்றும் புலம்பெயர் இறைமக்களும் வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

### யூபிலி ஆண்டின் தவக்காலம்

யூபிலி ஆண்டில் தவக்காலத்தை ஆரம்பித்திருக்கின்றோம். யூபிலி ஆண்டு இரக்கத்தின் ஆண்டு. இவ்வாண்டில் தவக்காலத்தின் ஆண்டவருடைய இரக்கத்தைநாம் இரட்டிப்பாகப் பெற இருக்கின்றோம். அர்த்தம் தெரிந்தோ அல்லது அர்த்தம் தெரியாமலோ வந்து போகும் காலங்களும், விழாக்களும், பண்டிகைகளும், கொண்டாட்டங்களும் எமது வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்ட நிகழ்வுகளாக அமைந்து விடுகின்றன. கிறிஸ்தவர்களைப்பொறுத்தவரை இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு மற்றும் பிறப்பு என்பன எம் வாழ்வின் பிரதான விசுவாச அடித்தளங்களாக அமைந்து விடுகின்றன. ஆனால் அந்த அடித்தளங்கள் ஈடாட்டம் காணும் போது தான் இவையெல்லாம் எதற்கு என்ற ஒரு கேள்வி பிறக்கின்றது.

வறண்டு போன நிலங்கள் எல்லாம் நதிகளைப் பார்த்து ஆறுதலடைகின்றன. ஆனால் அந்த நதிகளே வறண்டு போனால் என்ன செய்வது? இப்படித் தான் இன்று எமது வாழ்வு குறிப்பாக கிறிஸ்தவர்களின் விசுவாசத்துடன் கூடிய இறை வாழ்வு மெல்ல மெல்ல அஸ்தமனத்தை நோக்கி நகர்வதைக் காணமுடிகிறது. இதற்குப் பல்வேறுபட்ட காரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம். காரணங்கள் ஒரு புறம் இருக்கட்டும். தவறுகள் திருத்தப்பட வேண்டியவை; திருந்தப்பட வேண்டியவை; நியாயப்படுத்தப்பட வேண்டியவை அல்ல.

நெற்றியிலே சாம்பல் பூசித் தவக்காலத்தை ஆரம்பித்த நாங்கள் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்து பல ஒறுத்தல்களைச் செய்து மாமிசம் தவிர்த்து, மதுபானம் தவிர்த்து, கேளிக்கைகளில் ஈடுபடாது வாழ வேண்டுமென சொல்லளவிலே பல திட்டங்களைத் தீட்டி விடுகின்றோம். தவக்கால யாத்திரைத் தலங்களுக்கும், புனித நகர் பயணங்களுக்கும் எம்மைத் தயார்படுத்தி வருகின்றோம். இத்தனைக்கும் மத்தியில் ஈஸ்டர் கொண்டாடுவதற்கு ஆட்டுக் கிடாய் வளர்க்கவும்தலைப்பட்டுவருகின்றோம். இவைநடைமுறைப்படுத்தப்பட்டாலோ அல்லது நடைமுறைப்படுத்தப்படா விட்டாலோ மனத்தளவிலும் செயற்பாட்டு ரீதியிலும் எந்தளவு தூரம் கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வில் தவக்காலத்திற்கு அர்த்தம் தருகின்றோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தவக்காலத்தில் நோன்பு செபம், தர்மம் ஆகிய புண்ணியங்களில் ஈடுபட்டு அதனை பயனுள்ளதாக்க வேண்டும் எனத் திருத்தந்தை அவர்கள் தனது தவக்காலச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு விடயமும் வாழ்வாக்கப்பட்டாலே தவிர அதனால் எந்தவித பயனும் நாம் அடையப்போவதில்லை. இன்று நாம் சொல்லளவில் மாத்திரம் வாழ்ந்து விட்டுப்போக எத்தனிக்கின்றோம். அவர்கள் "சொல்வார்கள் ஆனால் செய்ய மாட்டார்கள்" எனக் கிறிஸ்து கூறினார். மகாகவி பாரதியாரும் "வாய்சொல்லில் வீரரடி" என இதைத் தான் குறிப்பிட்டார். சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாத இறை விசுவாசம் அர்த்தமற்றது என்பதை விட போலியானது என்பதை விட ஆபத்தானது என்பதே சாலப்பொருந்தும். **"செயலற்ற விசுவாசம் பயனற்றது"** எனப் புனித பவுலும் கூறுகின்றார்.

பாடசாலையில் அதிபர் ஒருவர் காலைக்கூட்டம் நடத்திக் கொண்டிருந்தார். மாணவர்களைப் பார்த்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு நற்செயலைச் செய்து விட்டு தன்னிடம் வந்து சொல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இன்று அப்படி யாராவது நற்செயல் ஏதேனும் செய்திருக்கின்றீர்களா? என்று கேட்ட போது மாணவன் ஒருவன் தான் அன்று காலை நற்செயல் செய்ததாக கூறினான். அதிபர் என்ன என்று கேட்டார். வயது போன காயப்பட்ட முதியவர் ஒருவரை வைத்தியசாலையில் அனுமதித்து விட்டுப் பாடசாலைக்கு வந்ததாகக் கூறினான். அவனை முன்னே அழைத்து மேடையில் ஏற்றிப் பாராட்டிய அதிபர் அந்த முதியவருக்கு என்ன நடந்தது என்று கேட்டார். மாணவன் அதற்கு "நான் தெருவில் இருந்த கல்லை எடுத்து மாங்காய் மரத்திற்கு எறிந்தேன் அது முதியவரின் தலை மீது விழுந்து விட்டது" என்றான். மாணவனை மேலும் கீழும் பார்ப்பதைத் தவிர அதிபருக்கு வேறு என்ன செய்வது என்று தெரியவில்லை. இப்படித்தான் இன்றைய எமது தவக்காலமும், கடைப்பிடிக்கும் நோன்புகளும், சொல்லும் செபங்களும், சுற்றும் சிலுவைப்பாதைகளும் அமைந்து விடுகின்றமை நிதர்சனமாகும்.

யோவேல் இறைவாக்கினர் "உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக் கொள்ளுங்கள்" (யோவேல் 2:12) எனக் கூறுகின்றார். உங்கள் நோன்புகளையும், பண்டிகைகளையும், ஓய்வு நாளையும் என் உள்ளம் வெறுக்கின்றது. அவைகளை சுமந்து இளைத்துப்போனேன் என ஆண்டவர் அங்கலாய்க்கின்றார். எமது நோன்புகள் எம்மை நற்செயல்களில் ஈடுபடுத்த வேண்டும் - பிறர் மீது எறியப்படும் கற்களாக இருக்கக்கூடாது. எமது நோன்புகள் எம்மை இறை விசுவாசத்தில் தாங்க வேண்டும் - துர்நாற்றம் மிக்க சாக்கடைகளாகத் தேங்கக் கூடாது. எமது நோன்புகள் பிறருக்கு உதவியாக இருக்கவேண்டும் - உபத்திரவமாக மாறக் கூடாது. எமது நோன்புகள் இல்லாமையில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் - இருப்பதிலிருந்து ஒரு துளியை எடுப்பதாக இருக்கக் கூடாது. எருசலேம் தேவாலயத்தில் கைம்பெண் கொடுத்த காணிக்கையை எம் மனக்கண் முன் நிறுத்துவோம்.

தானியேல் 5: 25 இல் "மேனே மேனே தேகேல் பார்சின்" என கூறப்படும் இறை வார்த்தையில் **தேகேல்** என்பது நீர் தராசில் நிறுக்கப்பட்டீர் எடையில் மிகவும் குறைந்துள்ளீர் என்பதாகும். தவக்காலத்தில் நோன்பிருந்து எமது எடைகளைக் குறைப்பது இதன் பொருளாகாது. இறை அன்பில், பிறரன்பில் எடை குறைந்தவர்களாக இருக்கின்றோம் என்பதே இதன் அர்த்தமாகும். தவக்காலம் எமது எடை, நடை உடைகளில் வெளிவேட மாற்றங்களை ஏற்படுத்தாது உள்ளார்ந்த ஆன்மீக மாற்றத்தை ஏற்படுத்தும் பயன்மிக்க காலமாக அமையட்டும். கூட்டொருங்கியக்க திருஅவையாகப் பயணிக்க விரும்பும் நாம் அனைவரும் இத்தவக்காலத்தில் உளமாற்றம் காண்போம்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# இதயத்தின் மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்லும் தவக்காலம்

தவக்காலப் பயணம் நம்மை இதயத்தின் மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்கின்றது, உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது என்றும், தூய்மைப்படுத்துதலின் காலம் ஆன்மிகப் புதுப்பித்தலின் காலம், நம்பிக்கை, எதிர்நோக்கு மற்றும் பிறரன்புப் பணிகளில் வளர்வதற்கான காலம் இத்தவக்காலம் என்று குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தவக்காலத்தின் முதல் வாரத்தை முன்னிட்டு மூவேளை செப உரையினை முன்னதாகவே தயாரித்து திருப்பீடத்தகவல் தொடர்பகத்திற்கு வழங்கியுள்ள எழுத்துவடிவப் படிவத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வத்திக்கான் வளாகத்தில் சிறப்பிக்கப்பட்ட தன்னார்வலர்க ளுக்கான யூபிலி சிறப்புத் திருப்பலியினை தனது மூவேளை செப உரைக்கருத்தில் நினைவுகூர்ந்துள்ள திருத்தந்தை அவர்கள், நாம் வாழ்கின்ற சமூகம், சந்தைக் கருத்தியல்கள் நிறைந்த சமூகமாக மாறிவிட்டது என்றும், தனி நபர் இலாபம் மற்றும் பலன்களை எதிர் பார்த்துப் பணியாற்றும் இச்சமூகத்தில் தன்னார்வலர்களின் பணி யானது எதிர்நோக்கின் அடையாளமாகவும், இறைவாக்காகவும் இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இறைவாக்கினர்களாக இருக்கும் தன்னார்வலர்கள் தங்களது பிறரன்புப் பணியினால் மிகவும் தேவையிலிருப்பவர்களுக்கு ஒன்றிப்பையும் பணியையும் இலவசமாகவும் முதன்மையாகவும் வழங்குகின்றார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

தன்னார்வ மனம் கொண்டு தங்களது நேரத்தையும் திறனையும் வழங்கி உழைக்கும் அத்தனை பணியாளர்களுக்கும் தனது நன்றியினைத் தெரிவித்துள்ள திருத்தந்தை அவர்கள், அயலாருக்கு உதவி அவர்களுக்கு அருகிருப்பு, மென்மை மற்றும் நெருக்கத்துடன் பணியாற்றி, அவர்களது உள்ளத்தில் எதிர்நோக்கை மீண்டும் எழுப்பிவிடுவதற்காகத் தனது நன்றியினையும் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் நீண்ட காலம் அனுமதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுவரும் திருத்தந்தை அவர்கள் இக்காலத்தில் மருத்துவர்கள் நலவாழ்வுப் பணியாளர்களின் அருகிருப்பு, மென்மை, நெருக்கம் ஆகியவற்றைத் தான் அனுபவித்து வருவதாக எடுத்துரைத்து அனைவருக்கும் தனது இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுவதாகத் தெரிவித்துள்ளார்.

நோயுற்றவர்களுக்கு மிக நெருக்கமாகவும், இறைப்பிரசன்னத்தின் அடையாளமாகவும் இருந்து உதவும் பலரை நினைவுகூர்வதாக எடுத்துரைத்துள்ள திருத்தந்தை அவர்கள், சோதனையில் இருப்பவர்களுடன் சேர்ந்து, துன்பத்தின் இரவில் சிறிது வெளிச்சத்தைக் கொண்டுவரும் மென்மையின் அதிசயம் நமக்குத்தேவை என்றும் எடுத்துரைத்துள்ளார்.

தனக்காக செபிக்கும் அனைவருக்கும் தனது நன்றியினைத் தெரிவித்துள்ள திருத்தந்தை அவர்கள், உரோமன் கூரியாவின் தவக்கால தியானத்தில் பங்கேற்கும் அனைவருடனும் ஆன்மிக அளவில் உடனிருப்பதாகவும் எடுத்துரைத்துள்ளார்.

துன்புறும் உக்ரைன், பாலஸ்தீனம், இஸ்ரயேல், லெபனோன், மியான்மார், சூடான், காங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளில் வாழும் மக்கள் அமைதி என்னும் பரிசைப் பெற சிறப்பாக நாம் ஒன்றிணைந்து செபிப்போம் என்றும், சிரியாவின் சில பகுதிகளில் தொடங்கியுள்ள கவலையளிக்கின்ற வன்முறையானது சமூகத்தின் அனைத்து இன, மதக் கூறுகளுக்கும், குறிப்பாக பொதுமக்களுக்கும் முழு மரியாதை அளிக்க அவ்வன்முறை நிறுத்தப்படும் என்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.


## வேலையாட்கள் தேவை

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் பணியாற்ற பணியாளர்கள் தேவை.

1. கணனி வடிவமைப்பு **(Photo Shop, InDisign)** ஆங்கிலம், தமிழ் தட்டச்சு தேர்ச்சியுடையவர்கள்.
2. புத்தகம் கட்டுதல் **(Binding)**

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட பணிகளைப் பயில விரும்புபவர்களும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
தொலைபேசி : 021 222 2378
0773043470


### சிவகங்கை மறைமாவட்ட ...

(1ம் பக்கத் தொடர்ச்சி..)

பக்தர்கள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப் படுவதாக கடந்த 06.03.2025 அன்று யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற முன்னாயத்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருநாட்டு பக்தர்களின் நலன்கருதி பக்கதர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திகொடுப் பதில் இலங்கை கடற்படை முனைப்புடன் பணியாற்றி வருவதாகவும் குடிநீர் மலசலகூடவசதி தற்காலிக கொட்டகைகள் மற்றும் துறவிகளுக்கான தங்குமிட வசதிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து கச்ச தீவிற்கான திருப்பயணத்தினை மேற்கொள்ள விரும்புகின்ற பக்தர்களுக்காக யாழ்பாண பேருந்து நிலையத்திலிருந்து 14 ஆம் திகதி காலை முதல் மதியம் 12 மணிவரை பேருந்து வண்டிகள் குறிகாட்டுவான் துறைமுகத்தை நோக்கிப் பயணிக்கும் என்றும் அங்கிருந்து ஒழுங்குசெய்யப்பட்டுள்ள படகு மூலமாக தீவினை வந்தடைய முடியும் எனவும் இதற்காக ரூபா 1300.00 கட்டணமாக அறவிடப்படும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை நெடுந்தீவிலிருந்து பயணத்தை ஆரம்பிப்பவர்களுக்குகட்டணமாக ரூபா 1000.00 வசூலிக்கப் படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கலை பண்பாட்டு ..

(1ம் பக்கத் தொடர்ச்சி..)

அமதி, மற்றும் அருட்தந்தை டியுக் வின்சன், அருட்பணி. அ. றொக்சன் ஆகியோர் செயற்படவுள்ளார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பியின் வழிகாட்டலுக்கு அமைய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் சமயப்பணி, வரலாற்றுப்பணி, சமூகப்பணி, மொழிப்பணிபோன்றவை உள்ளடக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பெற்றுக்கொடுகப்படவுள்ளன.

இதற்கான பொறுப்புக்களை பேராசிரியர் தி. வேல் நம்பி, பேராசிரியர் அருட்பணி. ஞா. பிலேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் துறைப் பேராசிரியர் திருமதி சுபதினி றமேஸ் ஆகியோர் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.


## நீங்காத நினைவுகளில் 11ம் ஆண்டு

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 23 . 11 . 1935 | | 15 . 03 . 2014 |



அமரர் **அருளானந்தம் திரேசம்மா**

"அவரது ஆன்மா ஆண்டவருக்குள் ஏற்புடையதாயிருந்தது"

காலம் எங்கள் கவலைகளை மறைக்கலாம்
கண்ணீர் எங்கள் மகிழ்ச்சியைத் துடைக்கலாம்
அன்பு நினைவுகள் ஒருநாளும் மறையாது

இவரது ஆன்ம இளைப்பாறுதலுக்காக 15.03.2025 (சனிக்கிழமை) காலை 6.00 மணிக்கு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

35/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ். மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் தவக்காலச் சுற்றுமடல்

AD JESUM PER MARIAM



## கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே!

### முன்னுரை

விபூதிப் புதனுடன் நாம் இவ்யூபிலி ஆண்டின் தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம். இது ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கும் உன்னதமான இரக்கத்தின் காலமாகும். நாம் ஒவ்வொருவரும் மனமாற்றம் கண்டு இறைதந்தையிடம் திரும்பவேண்டும் என்பதே இறை மகன் இயேசுவின் விருப்பமாகும். நமக்காகச் சிலுவையில் துன்புற்று, இரத்தம் சிந்தி, நமக்கு மீட்புத்தந்த அவருடைய பாடுகளில் நாம் ஒன்றித்திருக்க வேண்டும். எம் பாவங்களுக்காகச் சிலுவையில் அறையுண்டு இறந்து உயிர்ப்பின் வழியாக மீட்பை உணர்த்திய இயேசுவின் பாஸ்கா எம் ஒவ்வொருவரின் வாழ்விலும் இவ் யூபிலி ஆண்டில் நடைபெற வேண்டிய தொன்றாகும். லூக்கா பதின் மூன்றாம் அதிகாரத்தில் "கோபுரம் இடிந்து விழுந்து பதினெட்டு பேர் இறந்து விட்டார்கள்" (லூக்.13:4) என்று குறிப்பிடப்படுகின்றது. மனம் திருந்தாவிடில் நீங்கள் எல்லோரும் அவ்வாறு அழிந்து போவீர்கள் என இயேசு கூறியதை நினைவுபடுத்த வேண்டியுள்ளது. அத்தி மரத்தின் உவமையை நீங்கள் அறி வீர்கள். மூன்று ஆண்டுகள் கனி ஏதும் கொடாத போதும் தோட்டத் தொழிலாளர், "இதை வெட்டி விட வேண்டாம் இன்னும் ஓராண்டு இருக்கட்டும். இல்லையெனில் வெட்டி விடலாம்." (லூக். 13: 9) எனக் கெஞ்சிக் கேட்கின்றார். மனம் திரும்புவதற்கான, பலன் கொடுப்பதற்கான காலம் நமக்குக் கொடுக்கப்படுகின்றது.

நாமும் பலன் கொடுக்க, கனி கொடுக்க வேண்டுமென இறைவன் விரும்புகின்றார். எப்போது அத்தகைய பலன் கிடைக்கும் எனக் காத்திருக்கின்றார். இது கடவுளுக்கு ஏற்புடைய காலம். இதுவே மீட்பின் காலம். இக்காலத்தில் நாம் மனமாற்றம் காணவேண்டும். இறைவன் இதற்காகவே இத்தவக் காலத்தை எமக்குச் சிறப்பாக இவ்வாண்டில் தருகின்றார்.

### யூபிலி ஆண்டின் தவக்காலம்

தவக்காலம் திருயாத்திரையின் காலம். நாம் இக்காலத்தில் நம்பிக்கையுடனும், எதிர்நோக்குடனும் எமக்குள் ஓர் ஆன்மீகப் பயணம் செய்ய வேண்டும் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் விரும்புகின்றார். இவ் யூபிலி ஆண்டின் தவக்காலம் இறைவனின் அன்பு கடந்த இரக்கத்தை எமக்குப் பிரதிபலிக்கின்றது. "எதிர்நோக்கின் திருப்பயணிகளாக" ஒருமித்துக் கிறிஸ்துவின் ஓர் உடலாகத் திருஅவை பயணிக்க வேண்டும். அன்று இஸ்ராயேல் மக்கள் தமக்கு வாக்களித்த நாட்டிற்கு எதிர்நோக்குடன் பயணித்தார்கள். இறைவன் அவர்களுடன் எப்போதும் பிரமாணிக்கமாக இருந்து அடிமைத்தன வாழ்வில் இருந்தவர்களுக்கு விடுதலை வாழ்வைக் காண்பித்தார். நாமும் எமது தனிப்பட்ட சமூக பாவ வாழ்வில் இருந்து இவ்யூபிலி ஆண்டில் விடுதலை பெற வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாகும்.

### கூட்டொருங்கியக்க மாநாட்டின் இறுதி ஏடு

உலகஆயர்கள்மாமன்றகூட்டொருங்கியக்க மாநாட்டின் இறுதி ஏட்டின் கற்கையை குருக்கள், துறவிகள் மற்றும் பங்குப் பிரதி நிதிகளுடன் மறைமாவட்ட செயலமர்வாக நடாத்தியிருந்தோம். நாம் கூட்டொருங்கியக்கமாக பயணிக்க வேண்டிய வழிமுறைகளை இறுதி ஏடு தெளிவாகக் கற்பிக்கின்றது. திரு அவைக்குள் பாகுபாடுகள், வேறுபாடுகள் இருக்க முடியாது. கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நாம் அனைவரும் கடவுளின் ஒரே மக்களாய் இருக்கின்றோம் (காண்க கலா.3:26). எனவே திருத்தந்தை கூறுவதற்கு ஒப்ப நாம் பிறரின் பலவீனங்களில் பலன் கொடுப்போராய், பிறர் குற்றங்களை மன்னித்து ஏற்று வாழ வேண்டும். ஒருவர் ஒருவரைப் பகைத்தோ மிதித்தோ அல்ல, மாறாகஎல்லோரும்ஒருமித்துகரம்பிடித்துஒரே திசையில் ஒரே இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும். இன்று எம்மத்தியில் புரிந்துணர்வற்ற நிலையில் பல சமூகக் காரணிகளின் தாக்கத்தினாலும், மன்னித்து வாழ முடியாத நிலையினாலும் பல பிரிவினைகள், பிளவுகள் பங்குத்திருஅவையில் காணப்படுகின்றன. உறவு நிலையில் முரண்பாடுகள் எல்லா நிலையினர் மத்தியிலும் காணப்படுகின்றன. இறைவனின் இரக்கத்தைப் பெறும் நாம் இரக்க மற்றவர்களாக வாழ முடியாது. யூபிலி ஆண்டின் தவக்காலத்தில் இறை இரக்கத்தைப் பகிர்ந்து கூட்டொருங்கியக்க திரு அவையாகப் பயணிப்போம்.

திருமுழுக்கின் மூலமாக நாம் அனைவரும் இறை அரசிற்காக வெவ்வேறு வழிகளில் உழைக்கமுன்வர வேண்டுமென்று மாநாட்டின் இறுதி ஏடு எமக்கு அழைப்பு விடுக்கின்றது. நாம் எட்டிய முடிவுகளைச் செயற்படுத்தும் போது பங்குத் தந்தையர்களுக்கு ஆதரவு நல்குமாறு வேண்டுகின்றேன்.

### புனித காலத்தின் நற்செயல்கள்

இப்புனித காலத்தில் நாம் செய்யவேண்டிய நற்செயல்கள் மூன்று: அவையாவன செபம், நோன்பு, ஈகை என்பனவாகும். நம் ஆண்டவர் இயேசுவும் செபித்தார். நமக்குச் செபிக்கவும் கற்றுக் கொடுத்தார். எமது அன்றாட வாழ்வில் ஆண்டவருக்கு நன்றி கூறி மன்னிப்பு வேண்டி இறை வேண்டல் செய்வது எமது கடமை என்பதை உணர்வோம். இரண்டாவதாக அமைவது நோன்பு. எமது நோன்பு மற்றவர்களுக்கு அன்பு காட்டுவதாக அமைய வேண்டும். நாம் நோன்பு இருப்பதன் நோக்கம் மூன்றாவது நற்செயலாகிய ஈகைக்கு வழிவகுக்க வேண்டும். நாம் நோன்பு இருப்பது நாம் நலன் அடைய வல்ல. மாறாக பிறர் வாழ்வு பெறவே உதவ வேண்டும். எம் நோன்பு பரித்தியாகமாக மாற வேண்டும். குறிப்பாக பசித்திருப்போருக்கு, தேவையில் இருப்போருக்கு, வயது முதிர்ச்சி அடைந்த ஆதரவற்றோருக்கு உதவக் கூடியதாக அமைய வேண்டும். நம்மை ஆண்டவருடன் ஐக்கியப்படுத்த வேண்டும். எனவே இத்தவக்காலத்தில் பிறரை அன்பு செய்து, பகிர்ந்து வாழ்ந்து, இறைவனுடன் ஒன்றிணைவோம். திருத்தந்தைக்காக மன்றாடுவோம்

இந்நாட்களில் உடல் நலக் குறைவுடன் உள்ள எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்காக எமது நாளாந்த செபத்தில் மன்றாடுவோம். குணமளிக்கும் ஆண்டவர் அவரைத் தொட்டுக் குணப்படுத்தவும், அவர் அன்றாட பணிகளைச் செய்ய வேண்டிய உடல் உள ஆரோக்கியத்தை இறைவன் அவருக்கு நல்க மன்றாடுவோம்.

### இன்றைய அரசியல் நிலைமை

புதிய அரசாங்கம் "இலங்கையைச் சுத்தம் செய்வோம்" என்ற தொனிப் பொருளில் பல திட்டங்களைத் தொடங்கியுள்ளது. பொருளாதார மேம்பாட்டிற்கான முயற்சிகளை சிந்தித்து வருகின்றது. அரசாங்கத்தினால் பல ஊழல் செயற்பாடுகள் சட்டத்திற்கு முன் கொண்டுவரப்பட்டாலும் தென்னிலங்கையில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கொலைகள் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இந் நிலையில் வருகின்ற மாதங்களில் உள்ளூர் ஆட்சி தேர்தலை எதிர் கொள்ள உள்ளாம். மக்கள் பொறுமையுடன் தீர்க்கமான முடிவை வெளிப்படுத்த வேண்டும். இறைவன் எமது நாட்டிற்கு நிறைவான அமைதியை நல்குவாராக.

### திருநிலைப்படுத்தல் சடங்கு

எமது மறைமாவட்டத்திற்கு இறைவன் இவ்வாண்டில் நான்கு புதிய குருக்களைத் தரவுள்ளார். இந் நான்கு திருத்தொண்டர்களும் எதிர் வரும் மே மாதம் மூன்றாம் திகதி பணிக்குருக்களாகத்திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். அவர்களை இந்நாட்களில் உங்கள் செபங்களில் தாங்கிச் செல்லுங்கள். நிறைவாக

நம்பிக்கை எம் ஆன்மாவில் நங்கூரமாக உள்ளது. எனவே நம்பிக்கையின் திருப்பயணிகளாக ஆண்டவரின் பாஸ்காவை நோக்கிக் கூட்டொருங்கியக்கமாகப் பயணிப்போம்.

*கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள,*

**பேரருட்கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
**யாழ். மறைமாவட்ட ஆயர்**

# எதிர்நோக்கின் அடிப்படையில் நாம் அனைவரும் இணைந்து பயணிப்போம்

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 2025 ஆம் ஆண்டிற்கான தவக்காலச் செய்தி



**அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!**

நாம் அனைவரும் திருநீற்றை நெற்றியில் பூசிக் கொள்ளும் பரிகாரச் சடங்கின் வழியாக, தவக்கால ஆண்டுத் திருப் பயணத்தை நம்பிக்கையிலும் எதிர் நோக்கிலும் தொடங்க உள்ளோம். நமது அன்னையும் ஆசிரியையுமான திரு அவை, கடவுளின் அருளுக்கு நமது இதயங்களைத் திறந்திட அழைத்து, ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து பாவத்தின் மீதும் சாவின் மீதும் கொண்ட பாஸ்கா வெற்றியை மிகுந்த மகிழ்வோடு நாம் அனைவரும் கொண்டாட விரும்புகிறது. இதுவே, "சாவு முற்றிலும் ஒழிந்து வெற்றி கிடைத்தது. சாவே, உன் வெற்றி எங்கே? சாவே, உன் கொடுக்கு எங்கே?" (1கொரி 15:54- 55) என்று பவுலடியாரை அறைகூவலிடத் தூண்டியது. உண்மையிலேயே சிலுவையில் அறையப்பட்ட வரும் பின்பு உயிர்த்தெழுந்தவருமான இயேசு கிறிஸ்துவே நமது நம்பிக்கையின் இதயமாகவும் எதிர்நோக்கின் உறுதிமொழியாகவும் உள்ளார். இது, தம் அன்பார்ந்த மகனில் முன்பே நிறைவேறிய நிலைவாழ்வு எனும், கடவுளின் பெரிய வாக்குறுதியாக அமைகிறது (யோவா 10:28 17:3).

யூபிலி ஆண்டின் அருளில் நாம் பங்கெடுக்கும் இத்தவக்காலத்தில், "எதிர்நோக்கின் அடிப்படையில் நாம் அனைவரும் இணைந்து பயணிப்போம்" என்றால் என்ன? என்பதைக் குறித்தும் கடவுள் தம் இரக்கத்தால் நம் எல்லாருக்கும் தனிப்பட்ட விதத்திலும் குழுவாகவும் விடுக்கும் மனமாற்றத்திற்கான அழைப்பினைக் குறித்தும் ஒரு சில சிந்தனைகளை விவரிக்க ஆசைப்படுகிறேன்.

முதன் முதலாக, பயணம் மேற்கொள்வது: இந்த யூபிலி ஆண்டின் விருது வாக்கான "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" விடுதலைப் பயண நூலில் விவரிக்கப்பட்டுள்ள வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய இஸ்ரயேல் மக்களின் நெடிய பயணத்தை நம்மில் தூண்டி எழுப்புகிறது. அடிமைத்தளையிலிருந்து விடுதலையை நோக்கிய கடினமான இந்தப் பாதை, இறைவனால் விரும்பப்பட்டதும் வழிநடத்தப்பட்டதுமாய் உள்ளது.

அவர் தம் மக்களை அன்பு செய்பவராகவும் எப்பொழுதும் அவர்களுக்கு நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கின்றார். நாம் வாழும் இந்நாள்களில் நம்முடைய சகோதர சகோதரிகள், தங்களுக்கும் தங்களுக்கு நெருக்கமான வர்களுக்கும் சிறந்ததொரு வாழ்வை அமைத்துக்கொள்ள அவலம் மற்றும் வன்முறை போன்ற சூழ் நிலைகளிலிருந்து தப்பித்துச் செல்ல நினைக்கும் அவர்களை நினைக்காமல், திருவிவிலியத்தினுடைய விடுதலைப் பயணத்தைச் சிந்தித்துப் பார்ப்பது என்பது மிகவும் கடினமான ஒன்று. ஆகவே, மனமாற்றத்திற்கான முதல் அழைப்பு என்பது நாம் அனைவரும் இந்த வாழ்க்கையில் திருப் பயணிகள் என்பதைப் புரிந்துகொள்வதிலிருந்து வருகிறது. நம் அனைவரின் வாழ்வு, இந்தக் கருத்தை எப்படி பிரதிபலிக்கிறது என்பதைப் பற்றி, சற்று நம்மையே நாம் கேட்டுக் கொள்ள ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றோம். "நான் உண்மையிலே பயணத்தை மேற்கொள்கிறேனா? இல்லை, பயத்தினாலும் எதிர்நோக்கின்மையாலும் செயலற்றவனாகவோ அல்லது என்னுடைய சுகமான வட்டத்தை விட்டு வெளியே வரமுடியாமல் தயக்கம் கொண்டவனாகவோ அதனால் நகர முடியாமல் அப்படியே தேங்கியே நிற்கிறேனா?


(தொடர்ச்சி 5ம் பக்.)

# மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர்

### அதிவந்தனைக்குரிய

### மேதகு கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை

## ஆயர் இலச்சினை விளக்கம்




ஆயரின் இலச்சினை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. விவிலியப் பின்புலத்தில் எண் 5 என்பது, இறைத்திருவுளம், இரக்கம், அருள் ஆகியவற்றினைக் குறிப்பதோடு முழுமையான அர்ப்பணத்தின் அடையாளமாகவும் உள்ளது (காண். லேவி 1:5). ஆயரின் வாழ்வு இறை மக்களுக்காக அவர் இறைவனுக்கு வழங்கும் காணிக்கையாக இருக்கிறது. ரோஜா சிவப்பு, பொன்நிற மஞ்சள், தேன் ஆரஞ்சு, வானநீலம், கடல்நீலம் என்னும் நிறங்கள் ஐந்து பகுதிகளை நிறைத்துள்ளன. இவை பிரபஞ்சத்தின் ஐந்து உருப்பொருட்களையும் குறிக்கின்றன. வாழ்வும் இரத்தமும் இணைந்தே செல்பவை (லேவி 17:11). மேற்பகுதியில் குறிப்பிடப்படும் இரத்தமும் கீழ்ப் பகுதியில் குறித்துக் காட்டப்படும் தண்ணீரும் சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தையும் தண்ணீரையும் இங்கே அடையாளப்படுத்துகின்றன (யோவா 19:33-34). இதுவே அருளடையாளங்களின் ஊற்றாக அமைகிறது.

மன்னார் தலத்திருஅவையின் மறைசாட்சியரின் இரத்தத்தை மேற்பகுதி குறிக்கிறது. குறுக்கே செல்கிற குருத்தோலைகள் மறைசாட்சியர்கள் விண்ணகத்தில் பெற்ற வெற்றியை அடையாளப் படுத்துகின்றன (திவெ 7:9). எலும்புத் துகள்கள் கிறிஸ்துவுக்காக அவர்கள் அனுபவித்த துயரங்களைக் குறிக்கிறது. ”நான் கடவுளின் கோதுமை. கொடிய விலங்குகளின் பற்களால் அரைக்கப்படுகிற நான் கிறிஸ்துவின் அப்பமாக மாறுகிறேன்” என்னும் அந்தியோக்கு நகர் இஞ்ஞாசியாரின் சொற்களை இங்கே நினைவுகூருவோம்.



நடுப்பகுதியின் இடப்பக்கமாக நாம் காண்கிற ”பாலைநிலம்”, மனிதர்களின் செயற்பாடுகள் நடந்தேறாத இடத்தைக் குறிக்கிறது. பனைமரம் வலிமையையும், திடத்தையும், வாழ்வையும் குறிக்கிறது. எட்டுக் கதிர்களைக் கொண்டிருக்கிற கதிரவன் உலகின் ஒளியான இயேசுவையும் (யோவா 1:5, 9, 8:12) அவர் வழங்கிய எட்டு பேறுபெற்ற நிலைகளையும் (மத் 5:1-12) அடையாளப்படுத்துகிறது.

நடுப்பகுதியின் மையப் பக்கமானது நீராலும் நிலத்தாலும் சூழப்பட்டுள்ள மன்னார் தீவைக் குறிக்கிறது. இந்த நடுப்பகுதியில் தெரிகிற மன்னார் தீவைச் சுற்றி மூன்று அடையாளங்கள் உள்ளன: மடு குவிமாடம், குடை, நங்கூரம், குவிமாடம் விண்ணுலகும் மண்ணுலகும் இணைதலைக் குறிக்கிறது. கிறிஸ்துவைத் தன் வயிற்றில் தாங்கிய அன்னை கன்னி மரியாவை அடையாளப்படுத்துகிற மாடம், கடவுள் இந்த உலகுக்குள் நுழைந்த வாயிலை (கலா 4:4-5) குறிக்கிறது. தங்கக் குடை கடவுளின் பராமரிப்பையும் ”எம்” (M) என்னும் எழுத்து மரியாவையும் குறிக்கிறது. நங்கூரம் நாம் இப்போது கொண்டாடுகிற யூபிலி 2025 இலச்சினையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்த யூபிலி ஆண்டில்தான் நம் ஆயர் திருநிலைப்படுத்தப்படுகிறார்.

அன்னைக்காக நாம் கட்டிய புதிய ஆலயத்தின் மையப்பகுதியின் வலது பக்கமானது வேளாண்மை நிலத்தை குறிக்கிறது. நெல், இலங்கை மக்களின் அத்தியாவசிய உணவாகும். நெல் விளைச்சலானது, ஊட்டத்தையும், மனித உழைப்பையும், வளமையையும் குறிக்கிறது. நற்கருணையின் கோதுமையைப் போல நமக்கு நெருக்கமாக உள்ளது அரிசி. ஏழு பச்சைநிற இதழ்கள் நாம் நீடித்துக் கனிதா வேண்டும் என்பதை உணர்த்துகின்றன

கீழே உள்ள பகுதி கடல், வலை, மீன் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. இவை மன்னார் தலத்திருஅவையின் மீன்வளத்தையும் நம் முதன்மையான தொழிலையும் குறிக்கிறது. இயேசு தம் முதற்சீடர்களை அழைக்கும் நிகழ்வு கடற்கரையில் நடந்தேறுகிறது (மாற் 1:16-20). கடல் கடவுளின் படைப்பையும் (தொநூ 1:2), நோவாவின் காலத்தின் வெள்ளப்பெருக்கையும் (தொநூ 6:9 - 9:17), விடுதலைப் பயண நிகழ்வையும் (விப 14:21-29) குறிக்கிறது. ”மீன்” கிறிஸ்துவைக் குறிக்கிறது. மீன்களை அள்ளிக்கொண்டு வரும் வலைக்கு விண்ணரசை ஒப்பிடுகிறார் இயேசு (மத் 13:47). ஆழத்திற்குச் சென்று வலைகளை வீச நம்மை அழைக்கிறார் (லூக் 5:4-7).

இலச்சினையின் பின்னால் நாம் காணும் சிலுவை ஆசியாவுக்கே உரியதாகும். ஆசிய மண்ணில் கிறிஸ்தவத்தை விதைத்து நற்செய்தியை அறிவித்து நம்பிக்கையை வளர்த்தவர் இயேசுவின் திருத்தூதர் புனித தோமா என்பதையும், அவரின் சீடர்கள் சிலர் இந்த மன்னார் மண்ணிற்கு முதல் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வந்து நற்செய்தியைப் பரப்பியதையும் இந்தச் சிலுவை குறிக்கிறது.

இலச்சினையில் காணப்படும் ஏட்டுச்சுருளானது “உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” (லூக் 1:38) என்னும் அன்னை மரியாவின் சொற்கள் ஆயரின் விருதுவாக்காக அமைந்துள்ளதைக் குறிக்கிறது. கடவுளின் திருவுளத்தை ஏற்று நடப்பதிலே ஒவ்வொரு கிறிஸ்தவரும் கொள்ள வேண்டிய மேலான அர்ப்பணத்தை இது அறிக்கையிடுகிறது (லூக் 22:42-44). அன்னை மரியாவின் சொற்களாலான ஆயரின் இந்த விருதுவாக்கானது, நாம் ஒவ்வொருவரும் மரியாவின் மீது கொண்டிருக்க வேண்டிய வணக்கத்தையும், பற்றையும் வெளிப்படுத்துவதோடு, இயேசுவிடம் நாம் செல்ல அன்னை மரியாவும் நம்மோடு கூடவே பயணிக்கிறார் என்பதையும் குறிக்கிறது.

## மேதகு ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையின் வாழ்க்கைக் குறிப்புகள்

**பிறப்பு :** 12.07.1965

**பிறப்பிடம்:** இத்திக்கண்டல், அடம்பன்

**பெற்றோர்:** மரிசால்பிள்ளை அந்தோனிப்பிள்ளை, கபிரியேல்பிள்ளை ஜெயசீலி

**உடன்பிறப்புக்கள் :** திரு. அந்தோனிப்பிள்ளை தவராசா
: திரு. அந்தோனிப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை
: திருமதி. அந்தோனிப்பிள்ளை றெஜீனா
: அருட்சகோதரி அந்தோனிப்பிள்ளை ஞானசீலி

**பாடசாலைக் கல்வி :** முன்பள்ளி - பாலைக்குழி
: ஆரம்பக் கல்வி - பாலைக்குழி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, மன் /அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் மற்றும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி

**சிறிய குருமடம் :** புனித மடுத்தீனார் சிறிய குருமடம், யாழ்ப்பாணம்
மெய்யியல் /இறையியல் - புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை

**குருப்பட்டம் :** 07.04.1994 அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

**பங்குத்தளங்கள் :**
முருங்கன் - உதவிப்பங்குத் தந்தை (1994 - 1996 )
செட்டிக்குளம் - பங்குத்தந்தை (1999 - 2003 )
பள்ளிமுனை - பங்குத்தந்தை ( 2003 - 2006 )
வங்காலை - பங்குத்தந்தை (2006 - 2009 )
பேராலயம் - பங்குத்தந்தை (2018 - 2021 )
பேசாலை - பங்குத்தந்தை (2021 - 2023 )
மடுத்திருத்தலம் - பரிபாலகர் (2023 - 2025.02.22 )

**ஆயரின் செயலாளர்:** 1996- 1999 (மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை

**பட்டப்படிப்பு :**
மெய்யியல் இளமானி **B.Ph** (உரோம்)
இறையியல் இளமானி **B.Th** (உரோம்)
சமயக்கல்வி முதுமானி போடம் பல்கலைக்கழகம், நியூயோர்க், அமெரிக்கா.
இளைஞர் வலுவூட்டல் உருரவாக்கப் பயிற்சி, இந்தியா

**மடுமாதா சிறிய குருமட அதிபர் :** 2014 - 2018

**ஆயராக நியமனம் :** 14.12.2024 புனித செபஸ்தியார் பேராலயம், மன்னார்.

**ஆயர் திருப்பொழிவு :** 22.02.2025 மடுத்திருத்தலம்.
(பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்ன்ண்டோ ஆண்டகை )

## மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயரை மகிழ்வோடு வாழ்த்துகிறோம்.

வறண்டு போன பூமியின் மேல்
கனமழை பொழிந்து நனைத்தது போல்
முறிந்து காய்ந்த கிளை ஒன்று
தளிர்கள் கண்டு வளர்வது போல்
கன இருள் சூழ்ந்த இடத்தினிலே
ஒளிச்சுடர் ஒன்று ஒளிர்வது போல்
வேதசாட்சிகள் இரத்தத்தால்
நனைந்து போன மண்ணிற்கு
எம் தமிழ் மக்கள் குருதியினால்
செந் நிறமான பூமிக்கு
இறைவன் கருணை கொண்டதனால்
புதிய ஆயர் கிடைத்துள்ளார்.

வறண்டு போன நம்பிக்கை
சுனாமி போலப் பொங்கி எழ
தவறிப் போன கால்களெல்லாம்
நேரிய பாதையில் தடம் பதிக்க
உடைந்து போன இறையுறவு
புத்துயிர் பெற்றுப் பொலிவு பெற
அயலவனோடு அன்புறவில்
அனைவரும் வாழ்ந்து மகிழ்வு பெற
இறைவன் அருளால் புது ஆயர்
புரட்சிகரமாய் பணிசெய்ய
ஆவியின் அருள் கிடைத்திடவே
அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆயர் தோமஸ் வழி நின்று
அழகாய்ப் பணிகள் செய்திடவும்
அமரர் ஆயர் யோசேப் போல்
துணிவுடன் எமக்காய் குரல் தரவும்
இவரை அபிஷேகம் செய்கின்ற
ஆயர் இம்மானுவேல் பாதையிலே
மன்னார் மறையை ஆண்டிடவும்
நல்லாயன் கிறிஸ்துவை மாதிரியாய்
கொண்டு போதனை ஆற்றிடவும்
மந்தைகள் மணம்தனை நன்கறிந்து
தவறிப் போனதைத் தேடி இவர்
உயர் பணி ஆற்ற வாழ்த்துகிறோம்

ஆசிரியர் குரு ஆயன் என்ற
கிறிஸ்துவின் முப்பணி மேன்மையினை
நன்கு உணர்ந்து கொண்டவராய்
இறை ஆட்சி மலர்ந்திடவே
வார்த்தையை சிறப்பாய் போதித்து
அருள் வாழ்வில் நாம் வாழ
குருத்துவப் பணிகள் மேற்கொண்டு
ஆயனைப் போல் முன்சென்று
மந்தையை அன்பால் காத்திடவும்
இறைவன் அருள் பொழிந்திடவே
ஒத்த மனம் கொண்டவராய்
அன்போடு ஆயரை வாழ்த்துகிறோம்.

உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்
என்ற விருது வாக்கை சிரமேற்கொண்டு
தாழ்ச்சியோடு பாதம் கழுவிய
நித்திய குருவாம் கிறிஸ்துவைப் போல
உம்மைத் தாழ்த்தி பணிந்து குனிந்து
எளிய பணிகள் சிறப்பாய் ஆற்றி
சிலுவை சுமந்து கல்வாரி காணவும்
உன்னத பலியை ஒப்புக் கொடுத்து
நற்கருணை நிறுவி எமக்கு வழங்கவும்
தவறிய ஆட்டைத் தேடும் மேய்ப்பனாய்
காயம் கண்டு மருந்திடும் ஆயனாய்
ஆண்டிட ஆயரை வாழ்த்துகின்றோம்

Congratulations my Lord most Rev.Dr.Anthonipillai Gnanapiragasam

**அலெக்ஸ் அமலரட்ணம்**

# மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயருக்கு தோழமையின் வாழ்த்துகள்



திருச்சபையின் மறைமாவட்டங்களைக் கண்காணிக்கும் ஆயருக்குரிய பணி மேன்மையானதொரு பணியாகும். பிறரின் குறைச்சொல்லுக்கு ஆளாகாத வரும் அறிவுத் தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல், வன்முறைக்கு இடம்கொடாத மனிதப் பண்பு, கனிந்த உள்ளம், பொருளாசை அற்ற மனநிலை பொறுப்பில் இருக்கும் மந்தையை மதித்துப்பேணுதல், கட்டாயத்தினால் அன்றி கடவுளுக்கு ஏற்ற மனவப்பு டன் கொடுக்கப்பட்ட மந்தையை அடக்கி ஆளாமல் மந்தைக்கு முன்மாதிரியாக இருந்து விழிப்புடன் பணி செய்வதுதான் மறைமாவட்ட ஆயருக்குரிய தகுதிகள் என்று இறைவார்த்தை நமக்குக் கூறுகின்றது அந்த வகையில் மன்னார் மறைமாவட்ட மண்ணிலே பிறந்து வளர்ந்து குருவாகி இன்று மன்னார் மறை மாவட்ட ஆயராகத் திருநிலைப்படுத்தப்படும் எனது வகுப்புத்தோழனும் குருத்தோழனுமாகிய அருட்பணி. அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்கள் ஆயர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதை இட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டவர் யேசுவின் அன்பை அனுபவித்து அவரின் மந்தைகளைப் பேணி வளர்க்கவும் அந்த மந்தைகளுக்கு உணவூட்டி சிறந்த ஆயனாகப் பணி அழைப்பைப் பெற்ற மன்னார் மறைமாவட்ட புதிய ஆயர் அதிவந்தனைக்குரிய ஞானப்பிரகாசம் ஆண்டகையுடன் இணைந்து நான் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

ஒரு வளரும் பயிரை முளையில் தெரியும் என்னும் முதுமொழிக்கேற்ப சிறுவனாக இருந்த போதே இறைபக்தியும், விசுவாசமுடையவராகவும் வாழ்ந்து இறை அழைத்தலை உணர்ந்தவராக புனித மடுத்தீனார் குருமடத்தில் 05.01.1980 அன்று இணைந்து கொண்டார். நான் சிறிய குருமடத்தில் ஆங்கில வகுப்பில் 25.09.1984 அன்று இணைந்த போது நான் சந்தித்த முதல் குருமட மாணவன் ஆயர் ஞானப்பிரகாசம். நான் எனது பெற்றோருடன் சென்று குருமடத்தில் இணைந்த போது சிறிய குருமட அதிபராக இருந்த அருட்தந்தை பிலேந்திரன், ஆயர் ஞானப்பிரகாசத்தை அழைத்து எனக்குரிய குருமட விடுதியின் இடத்தைக் காட்டி ஒழுங்குளை மேற்கொள்ளும் படியாக கூறினார். அப்போது குருமடத்தில் புதிதாக இணைந்த மாணவர்களுக்கு குருமட ஒழுங்குளை பற்றிக் கூறினார்.

சிறிய குருமடத்தில் இருந்தபோது நாங்கள் ஆங்கில வகுப்பில் இருந்தபோது எமது வகுப்பில் பலர் இருந்தார்கள் புதிய ஆயர் ஞானப்பிராகாசம் காலை, மாலை செபங்களிலும் வகுப்புக்களிலும் அங்கு நடைபெற்ற செயற் பாடுகளிலும் ஒழுங்காகப் பங்குபற்றித் தனது குருமட உரு வாக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இறை விசுவாசமும், பக்தியுடையவராகக் காணப்பட்டார். அப்போது அருட்பணி. நீக்கிலஸ் அடிகளார் குருமடத்தில் இருந்த மாணவர்களுக்கு ஆன்மீக ஆலோசகராகவும் பணியாற்றினார். அப்போது இலங்கை இராணுவத்தினர் குருமடத்தை நோக்கித் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதையும் அதன் காரணமாக நாங்கள் அனைவரும் அயலில் உள்ள செபமாலை தாசர் சபை ஆச்சிரமத்திற்கு சென்று பாதுகாப்பிற்காக தஞ்ச மடைந்தையும் மறக்க முடியாது. இக்காலத்தில் அருட்தந்தை பிலேந்திரனின் உருவாக்கத்தை சிறந்த முறையில் பெற்றது குறிப்பிடத்தக்கது.பின்னர் நாங்கள் கொழும்புத் துறையில் புனித சவேரியார் பெரிய குருமடத்தில் இணைந்த போது அருட்தந்தை அமரர் பிலிப்பொன்னையா அடிகள் அதிபராக இருந்தார்.

அப்போது குருமட கல்வியுடன் மறைக்கல்வி கற்பித்தல், அயலில் உள்ள ஆலயங்களுக்கு சென்று உதவி புரிந்தோம். அதன் பின்னர் அருட்பணி S. J. இம்மானுவேல் குருமட அதிபராகப் பொறுப்பேற்றார். நாட்டில் உள்நாட்டுப் போர் அதிகரித்து சென்றது விடுமுறைக்காக சென்று வருவதில் மன்னார் மறைமாவட்ட குருமட மாணவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. துவிச் சக்கரவண்டியில் பயணம் செய்யும் நிலைக்குத் தள்ளப் பட்டார்கள். இப்படியான அனுபவங்கள் அருட்சகோதரர் ஞானப்பிரகாசத்தின் உருவாக்கத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தி இருந்தாலும் தனது குருத்துவப் பணி இலக்கில் உறுதியோடு இருந்து அவற்றை ஏணிப் படிகளாக அமைத்துக் கொண்டார்.

இக்காலகட்டத்தில் உள்நாட்டு யுத்தத்தின் தாக்கம் உக்கிரமாக அதிகரித்து சென்றது. விமானதாக்குதல்கள் எறிகணை வீச்சுக்கள் கடற்படையினரின் பீரங்கித் தாக் குதல்கள் என்பன எமது நாளாந்த அனுபவங்களாயின குருமடத்திலும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டன. அக் காலத்தில் குருமட அதிபராக இருந்த S.J. இம்மானுவேல் அவர்கள் குருமட உருவாக்கத்தை மக்களின் இன்னல்களில் இருந்து தனிமைப்படுத்த முடியாது என்ற நோக்குடன் மக்களின் துன்பங்களில் பங்கெடுக்க வேண்டும் என்று போரினால் காயமடைந்த போராளிகளுக்கும், பொதுமக்க ளுக்கும் இரத்ததானம் வழங்குதல், போராளிகள், பொது மக்களைப் பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு குரு மட மாணவர்களாகிய நாங்கள் பங்களிப்பு செய்வதில் அவர் ஆர்வமுடையோராகக் காணப்பட்டார். இத்தகைய செயற்பாடுகளில் அருட்சகோதரர் ஞானப்பிரகாசமும் ஆர்வத்துடன் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

அனைவருடனும் இலகுவாகப் பழகி பலரைத் தனது பேச்சுத் திறமையினால் கவர்ந்து சிறுவர், இளையோர், பெரியோருடன் தொடர்புகளை உருவாக்கித் தனது தலை மைத்துவப் பண்பை வளர்த்துக் கொண்டார். குருமடத் தில் நடைபெற்ற நாட்டுக்கூத்து, நாடகங்கள் என்பவற் றில் பங்குபற்றி தனது திறமைகளையும் வெளிப்படுத் தினார். போர்க்களத்தில் துன்பப்படும் மக்களுடன் தன்னை இணைத்துத் தனது குருத்துவ உருவாக்கத்தை மேற்கொண்டார். குருமடத்தில் இருக்கும் போது தனது மறைமாவட்டத்தில் பற்றும் அக்கறையும் உள்ளவராக காணப்பட்டார். உண்மை, நீதி என்பவற்றுக்குக் குரல் கொடுப்பராகவும் பிறருக்கு உதவி செய்யும் பண்புடையவராகவும் காணப்பட்டார். இவர் குருத்துவ வாழ்வின் ஆரம்பகாலத்தில் முன்னாள் ஆயரின் செயலாளராக வும், பல பங்குகளில் பங்குத்தந்தையாகவும் மன்னார் சிறிய குருமட அதிபராகவும் பணியாற்றியமை, இவர் நல்ல ஆயனுக்குரிய பண்புகளை கொண்டு விளங்கு வதாக வெளிப்படுகிறது. மேலும் அமெரிக்காவில் உயர் கல்வி பயின்று தனது அறிவுசார் புலமையை வெளிப் படுத்தியமை இவரின் வாழ்வுக்குப் பக்கபலமாக அமைந்தது.

மன்னார் மாவட்டத்தில் பிரஜைகள் குழுத்தலைவராக இருந்து அந்த மாவட்டத்தில் உள்ள பல இன, மத மக்களை ஒன்றுசேர்த்து வழிநடாத்துவதில் சிறந்து விளங்கியதுடன் அந்த மாவட்ட வளர்ச்சிக்காக அரும் பணியாற்றினார். இறுதியில் இலங்கையின் பிரசித்திபெற்ற மருதமடு அன்னையின் திருத்தலப் பரிபாலகராக இருந்து மருதமடு அன்னையின் முடிசூட்டுவிழா யூபிலியைசிறப்பாக நடாத்துவதில் பெரும்பங்காற்றினார். ஏது மன்னார் மறைசாட்சிகளின் இரத்தத்தில் பெரும் விருட்சமாக வளர்ச்சியடைந்துள்ள மன்னார் மறை மாவட்டத்தை வழிநடத்தும் நல்ல ஆயனாக இருக்க வும். இம் மறைமாவட்டத்தை இறை திட்டப்படி நடாத் துவதுதற்கு வேண்டிய அருள் ஆசிகளை இறைவன் இவருக்கு வழங்க வேண்டுமென்று வேண்டுவதுடன் மருதமடு அன்னையின் பரிந்துரை இவருக்கு நிறை வாக கிடைக்கவும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை கூறிநிற்கின்றேன்.

## பாடசாலைத் தோழமையின் மகிழ்வில்

புதிய ஆயர் அவர்கள் இயல்பிலே கலகலப்பானவர். எப்பொழுதும் புன்சிரிப்புடன் எல்லோரையும் வரவேற்கும் மனப்பாங்கு கொண்டவர். எல்லோருக்கும் உதவிக்கரம் நீட்டி எல்லோரின் தேவைகளையும் நிறைவு செய்வதில் பிரிய மானவர். மிகவும் எளிமையான வாழ்வும் ஏழை எளியவர்கள் மீது பற்றும் கொண்டவர். கடமையில் கண்ணியமும், பணிவாழ்வில் அர்ப்பணிப்பும் நிறைந்தவர். மரியன்னை மீது மட்டற்ற பக்தியும் கொண்டவர். செயலிலும் செபமாலை சொல்வதிலும் மிகவும் பிரமாணிக்கமானவர். பல இலட்சம் பக்தர்களைக் கொண்ட மடுப்பதியில் கொலு வீற்றிருக்கும் அன்னையின் பாதார விந்தத்தில் பணியாற்ற அழைப்பு பெற்றிருக்கின்றீர். அந்த மகத்தான பதியில் இன,மத பேதங்களைக் கடந்து வரும் கோடி பக்தர்களை வழிநடத்தும் பாரிய பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளீர்கள். உங்கள் பணிசிறக்க உங்களை வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

அருட்தந்தை. ஜோசப் பிரான்சிஸ்

## எதிர்நோக்கின் அடிப்படையில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நம்முடைய அன்றாட வாழ்க்கையைப் புலம் பெயர்ந்தவரோடு அல்லது வெளி நாட்டவரோடு ஒப்பிட்டுப் பார்த்து அதன் வழியாக அவர்களுடைய அனுபவங்களில் எப்படி நாம் நம்மையே ஒன்றிணைத் துக் கொள்வது? என்ற படிப்பினையைப் பெறவும், இதன் வழியாகக் கடவுள் நம் மிடம் தந்தையின் இல்லத்தை நோக்கிச் சிறந்த முறையில் நம் திருப் பயணத் தில் முன்னேற எதை எதிர் பார்க்கிறார் என்று கண்டுணர்ந்து கொள்வதும் நமக் கான சரியானதொரு தவக்காலப் பயிற் சியாக அமையும். வழிப் போக்கர்களா கிய நம் எல்லாருக்கும் இது சிறந்தோர் ஆன்மிகச் சோதனையாகவும் அமையும்.

**இரண்டாவதாக, இணைந்து பயணித்தல்:**

கூட்டொருங்கியக்கத் திரு அவை யாக இருக்க, இணைந்து பயணிக்க நாம் அழைக்கப்படுகிறோம். கிறித்தவர் கள் தனிமையாகப் பயணிக்கும் பயணி களாக அல்லாமல், மற்றவர்களு டன் ஒன்றி ணைந்து நடக்க அழைக்கப் படுகின்றோம். தூய ஆவியார் நமக்குப் பின் னால் கொண்டுவந்து நாம் சுயநலவாதிகளாக இல்லாமல் கடவுளையும் நமது சகோதர- சகோதரிகளையும் நோக்கி நடந்திட உந்தித் தள்ளுகிறார். இணைந்து பயணித்தல் என்பது கடவுளின் பிள்ளைகள் என்ற பொதுவான மேன்மையின் அடித்தளத்தில் நம் ஒன்றிப்பை ஒருங்கிணைந்து பார்ப்பதாகும் (கலா 23:26-28). அதாவது, ஒருவர் மற்றவருடன் இணைந்து நடப்பதும், எவரையும் தள்ளாம லும் மிதித்து விடாமலும், கோபம் மற்றும் வெளிவேடத்தால் எவரையும் பின்னால் விடா மலும் ஒதுக்கிவிடாமலும் இருப்பதாகும். நாம் அனைவரும் அன்பிலும் பொறுமையிலும் அடுத்தவர் நலனில் அக்கறை கொண்டு ஒற்றை இலக்கை நோக்கி உறுதியோடு ஒரே திசையில் பயணிப்போம்!

இத்தவக்காலத்தில் நம்முடைய வாழ்க் கையில், நம் குடும்பங்களில், பணித் தளங்களில் மற்றும் பொது இடங்களில் நாம் மற்றவருடன் ஒன்றாக இணைந்து நடப்ப தற்கும், அவர்களுக்குச் செவி மடுப்பதற்குப் பதிலாக நம்முடைய தேவைகளைப் பற்றி மட்டுமே நினைத்துக்கொண்டிருக்கும் சோதனையிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ளத் தகுதி உள்ளவர்களா? என்பதைக் குறித்து கடவுள், நம்மைச் சுய பரிசோ- தனை செய்ய அழைக்கிறார்.

இறையாட்சிப் பணியில் பங்குபெறும் நாம் ஆயர்களாக, குருக்களாக, துறவிகளாக, பொது நிலையினர்களாக மற்றவர்களோடு இணைந்து செயலாற்றுகி றோமா? என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வோம். நம் அருகில் இருப்பவரோடும் தூரத்தில் இருப்ப ரோடும் ஆக்கபூர்வமான உடல் மொழிக- ளில் வரவேற்கும் மன நிலையை வெளிப் படுத்துகிறோமா? குழு மங்களில் நானும் ஒருவர் என மற்றவர்கள் பங்கெடுக்கச் செய்கி றோமா? அல்லது அவர்களைத் தனித்து வைக்க முயற்சித்திருக்கிறோமா?

இதுவே மனமாற்றத்தின் இரண் டாம் அழைப்பாகும். அது கூட்டொருங்கி யக்கத்திற்கான அழைப்பாகும். மூன்றாவ தாக, எதிர்நோக்கின் அடிப்படையில் நாம் அனைவரும் இணைந்து பயணிப்போம்: ஏனெனில் வாக்குறுதியை நாம் பெற் றுக்கொண்டுள்ளோம். யூபிலியின்மையக் கருத்தான "எதிர்நோக்கு ஏமாற்றம் தராது" (உரோ 5:5) என்பது, பாஸ்காவின் வெற் றியை நோக்கி நமது தவக்காலத் திருப் பயணத்தின் இலக்காக அமையவேண் டும். "நம்பிக்கை விடுதலை அளிக்கும்" என்ற தனது திருமடலில் திருத்தந்தை 16-ஆம் ஆசிர்வாதப்பர் நமக்குக் கற் பித்ததைப் போன்று மனிதனுக்கு நிபந் தனையற்ற அன்பு தேவை. "சாவோ, வாழ்வோ வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ, உன்னதத்தில் உள்ள வையோ, ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்த படைப்போ, நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப் பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறு- தியான நம்பிக்கை" (உரோ 8:38-39), என்று கூற உறுதித் தன்மை தேவைப்படுகிறது. என் நம்பிக்கையாம் கிறிஸ்து உயிர்த்துவிட்டார் அவர் மாட்சியில் வந்து ஆட்சி செய்து கொண்டிருக்கின் றார் சாவு வெற்றியாய் உருமாற்றம் பெற்றுள்ளது.

ஆகவே, கிறித்தவர்களின் நம்பிக்கை யும் சிறந்த எதிர்நோக்கும் கிறிஸ்து வின் உயிர்ப்பில் அடங்கியுள்ளன.

# அன்பின் மகிழ்வு



24

### தவக்காலம் குடும்பத்திற்கான ஒரு அருளின் காலம்

2025ம் ஆண்டை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நமக்கு யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தி இறையருளைப் பெற்று மனமாற்ற மடைகின்ற ஒரு இரக்கத்தின் காலமாகத் தந்திருக்கின்றார். இந்த சிறப்பான யூபிலி ஆண்டில் நம் திரு அவை ஒரு மிகச் சிறப்பான காலமாக இந்தத் தவக் காலத்தை நம் குடும்பங்களிற்குத் தந்திருக்கின்றது. எனவே இந்த அருளின் காலத்தை நம் குடும்பத்தில் வாழ நாம் அழைக்கப்படுகின்றோம்.

**1. நெற்றியில் சாம்பல் :-**

தவக்காலத்தை திரு அவை விபூதிப் புதனுடன் ஆரம்பிக்கின்றது. திருநீற்றுப் புதனன்று திருஅவை ஓர் ஆழமான ஆன்மீகப்பாடத்தை நமக்குக் கற்றுத் தருகின்றது. எங்களுடைய நெற்றிகளில் சாம்பலைப் பூசி " மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய், மண்ணுக்கே திரும்புவாய் மறவாதே" ( தொ.நூ 3: 19 ) எனவே மனித வாழ்வானது இவ்வுலகத்திலே நிரந்தரமற்றது. மனித வாழ்வு சடுதியாக முடியக் கூடியது. " எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகளே, வலிமை மிக்கோருக்கு எண்பது ஆண்டுகளே" (திரு.பா 90 ) " மனிதனின் வாழ்நாள் புல்லைப் போன்றது, வயல்வெளி பூவென அவர்கள் மலர்கின்றார்கள். அதன் மீது காற்றடித்ததும் அது இல்லாமல் போகிறது" ( திரு. பா 103: 15 - 16 )

எனவே இந்த நிலையற்ற உலகில் நிலையான இறைவனை மனிதன் அடைய திரு அவை அழைக்கின்றது. ஆகவே தான் நிலையற்ற உலகில் நிலை யான கடவுளைக் காண வேண்டும் என்று திரு அவை இந்த அருளின் காலத்தைத் தந்திருக்கும் வேளையில் இது ஆன்மீகதத்துவத்தை பெற்றோர்கள் வாழ்வது மாத்திரமல்ல, தங்கள் பிள்ளைகளுக்கும் ஆன்மீகப் பாடத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

**2. இத்தவக்காலத்தில் நிலையற்ற இவ்வுலகில் இறைவனை அடைய திரு அவை 3 வழிகளை நமக்கு கற்பிக்கிறது.**

**முதலாவதாக தர்மம் செய்தல் :-** இத்தவக்காலத்தில் சிறிய சிறிய ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு அதிலிருந்து வருகின்ற சிறிய சேமிப்பை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்ள நாம் பிள்ளைகளுக்குப் பழக்க வேண்டும். ஒரு முறை ஒரு தாய் என்னுடன் பகிர்ந்து கொண்டவார்த்தைகள் இவை " **Father** என்னுடைய மகன் என்ன தேவைக்குப் பணம் கேட்டாலும் தருவான் ஆனால் இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்ள, அவர்களுக்கு உதவி செய்யவென்று பணம் கேட்டால் முகவாட்டத்தோடு சென்றுவிடுவான். எனக்கு இது கவலையாக உள்ளது." அன்னைத்தெரேசாள் சொல்லுகிறாள் " நான் ஏழைகளோடு என்குள்ளதைப் பகிர, ஏழைகளுக்காக வாழக் கற்றுக் கொண்டது என்னுடைய தாயிடமிருந்து குறிப்பாக சிறிய வயதில் தன்னுடைய தாய் ஒவ்வொரு நாளும் தான் சமைக்கின்ற உணவில் ஒரு சிறிய பகுதியை என்னுடைய வீட்டிற்கருகில் இருக்கும் ஏழைகளோடு பகிர்ந்து கொள்ளத் தருவார். இதுவே என் வாழ்வில் ஆன்மீகப் பயிற்சியாக மாறியது" "மிக சிறியோராகிய என் சகோதர சகோதரிகள் ஒருவருக்கு நீங்கள் செய்வதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" ( மத் 25:40 ) எனவே இத்தவக்காலத்தில் எம் குடும்பத்திலுள்ள பிள்ளைகளை செய்யும் தர்மம் கிறிஸ்துவுக்காக செய்வதில்லை மாறாக கிறிஸ்துவுக்கு செய்கின்றோம் என்பதை பெற்றோர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்தத் தர்மம் பிள்ளைகளுக்கும் குடும்பத்திற்கும் அருளைக் கொண்டு வரும் என்பதைப் பிள்ளைகளுக்கு புரிய வைக்க வேண்டும்.

இரண்டாவதாக இறைவனை அடையத் திரு அவை காட்டுகின்ற முக்கிய வழி செபமாகும். புனித யாக்கோப்பு சொல்கிறார் " கடவுளை அணுகிச் செல்லுங்கள் அவரும் உங்களை அணுகி வருவார். (யாக் 4:8) எனவே இந்த தவக்காலத்தில் செபத்தினூடாக இறைவனை நெருங்கி வர நம் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். பெற்றோஉகள் செபிப்பதை பிள்ளைகள் காண வேண்டும். ஒரு முறை ஒரு குருமட மாணவனைப் பார்த்து நீ யாரிடமிருந்து செபிக்கக் கற்றுக் கொண்டாய் எனக் கேட்ட போது அவர் தந்த பதில் அழகானது. நான் செபிக்க கற்றுக் கொண்டது என்னுடைய தாயிடமிருந்து. என்னுடைய அம்மா காலை எழுந்தவுடன் செபிப்பார், படுக்கைக்குச் செல்லும் முன் செபிப்பார், முக்கிய விடயங்களைத் தொடங்கும் முன் செபிப்பார், செபமாலை உருட்டி செபிப்பார், இறைவார்த்தையை வாசித்துச் செபிப்பார், வசதியுள்ள நேரமெல்லாம் திருப்பலிக்குச் சென்று செபிப்பார். எனவே பெற்றோரின் செபவாழ்வு பிள்ளைகளுக்கு பெரும் கொடையாக மாறுகின்றது. எனவே தவக்காலத்தில் பிள்ளைகளை செபிக்கப் பெற்றோர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். செபம் என்பது இறைவனை பிள்ளைகள் கண்டடையும் பெரும் வாய்ப்பாகும்.

மூன்றாவதாக இறைவனைக்கண்டடைய உபவாசம் என்பது ஒரு முக்கிய வாய்க்கால் என்பதை இத்தவக் காலத்தில் திருஅவை வலியுறுத்துகின்றது. இயேசு நாற்பது நாள் இரவும் பகலும் பாலைவனத்தில் நோன்பிருந்தார் என்பதைத் திருவிவிலியம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. எனவே தவக்காலத்தில் நம் பிள்ளைகள் நோன்பிருக்க பெற்றோர்கள் பழக்க வேண்டும். சிறிய சிறிய தியாகங்களை இந்தத் தவக் காலத்தில் செய்யப் பெற்றோர்கள் பயிற்றுவிக்க வேண்டும். ஏனனில் தியாகம், என்னை ஒறுப்பதில் ஒரு தியாகம், சமூகவலைத் தளங்களில் செலவிடும் நேரங்களைக் குறைப்பதில் ஒரு தியாகம், பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் போது பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சிற்றுண்டிக்காக கொடுக்கும் பணத்தில் ஒரு சிறிய தொகையை தியாகம் செய்து ஒரு ஏழை மாணவனுக்கு உதவத் தூண்டுவது. ஒரு தியாகமாகப் பெற்றோர்கள் இத்தவக்காலத்தில் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்

**முடிவாக:** தவக்காலம் ஒரு குடும்பத்திற்கான அருளின் காலம், குடும்பத்திலே இறையருளைக் கொண்டு வருகின்ற அழகான காலமாகும். எனவே இந்த விசேட காலத்தை குடும்பமாக பயன்படுத்தி இறையருளைப் பெறுவோமாக.

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

# அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை





## மணமகள் தேவை

வயது : - 30
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- BA
தொழில் ::- Hard ware shop - Vechile Transport
பிரதேச செயலகம் :- இணுவில்

வயது - 35
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- O/L
தொழில் :- கடற்றொழில்
பிரதேச செயலகம் :-யாழ்ப்பாணம்

வயது - 28
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை :- O/L
தொழில் :- மெக்கானிக்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

## மணமகன் தேவை

வயது - 35
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BA
தொழில் :- சமுர்த்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் :- சண்டிலிப்பாய்

வயது - 27
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Bachelor of Business Management (Final Year)
தொழில் :- Cutt Medical
பிரதேச செயலகம்:- சண்டிலிப்பாய்

வயது - 27
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BA
தொழில் :- School Teacher
பிரதேச செயலகம் :- கொற்றகேன

வயது - 28
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 37
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- தையல்
பிரதேச செயலகம் :- தெல்லிப்பழை

இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்
அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கங்கள்
077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.

# விரைந்து உதவும் அன்னை மரியா எதிர்நோக்கின் அடையாளம்

விரைந்து உதவும் குணம் கொண்ட அன்னை மரியா தனது உதவியை நாடுவர்களுக்கு எதிர்நோக்கின் அடையாளமாக சுடர்விடுகின்றார் என்றும், தனிநபராக தனது மகன் இயேசு கிறிஸ்துவின் துன்ப மறைபொருளில் பங்கேற்ற திருஅவையின் தாயான அன்னை மரியா திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரின் வாழ்விலும் பங்கேற்கின்றார் என கர்தினால் லாசரஸ் யு கியூங் சிக் தெரிவித்தார்.

கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் நடைபெற்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல் நலத்திற்காக நடைபெற்ற 12-ஆவது நாள் சிறப்பு செபமாலை வழிபாட்டிற்குத் கர்தினால அவர்கள்தலைமையேற்று வழிநடத்தியபோது இவ்வாறு எடுத்துரைத்தார்

தவக்காலத்தின் முதல் வெள்ளியும் மாதத்தின் முதல் வெள்ளியுமாகிய கடந்த 7ம் திகதி வெள்ளிக்கிழமையன்று, வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் நடைபெற்ற இந்த சிறப்பு செபமாலை வழிபாட்டில் ஏராளமான கர்தினால்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார், உரோம் மறைமாவட்ட மக்கள் என நூற்றுக் கணக்கானோர் அன்னை மரியின் திருஉருவப்படத்திற்கு முன்பாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல் நலத்திற்காக செபித்தனர்.

துயரம் நிறை மறையுண்மைகள் தியானிக்கப்பட்டு செபமாலை வழிபாடானது மிகுந்த பக்தியாக இறைமக்களால் ஏறெடுக்கப்பட்டது. செபமாலையின் இறுதியில் அன்னை மரியா மன்றாட்டு மாலை செபிக்கப்பட்டதைத் தொடர்ந்து வழிபாட்டின் நிறைவு செபத்தினை கர்தினால் அவர்கள் எடுத்துரைத்தார்.

அச்செபத்தில், நாம் அனைவரும் நம்பிக்கையில் விடாமுயற்சியுடன் இருந்து, அன்பில் வளர்ந்து, எதிர்நோக்கின் இறுதி வரை ஒன்றிணைந்து நடப்போம் என்று கூறி நிறைவுசெய்தார்.

**l'Oremus pro Pontifice** என்னும்திருத்தந்தைக்கான செபம் பாடலாகப் பாடப்பட்டதைத் தொடர்ந்து கர்தினால் அவர்களின் செப ஆசீருடன்செபமாலைவழிபாடானதுநிறைவுக்குவந்தது.

நோயுற்றோரின் நலன் என்ற பெயரைத் தாங்கியிருக்கும்அன்னைமரியாதிருத்தந்தையைநலமுடன் பாதுகாப்பார் என்ற நம்பிக்கையையும் நாம் ஒவ்வொரு வரும் திருத்தந்தைக்காகச் செபிக்கும் கடமையைக் கொண்டுள்ளோம், அதேவேளை, அவர் விரும்பும் செயல்களையும் நாம் ஆற்றவேண்டும் என கேட்டுக்கொண்டார் கர்தினால்.

# திருத்தந்தை தன் குரலிலேயே வழங்கிய நன்றிச் செய்தி

கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதியிலிருந்து உரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனக்காக உலகம் முழுவதும் செபித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களுக்கும் நன்றிச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மூச்சுக்குழல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவரும் திருத்தந்தையின் உடல் நலத்திற்காக, பெப்ரவரி 24 முதல் உரோம் நகரிலுள்ள கர்தினால்கள், வத்திக்கான் அதிகாரிகள் மற்றும் விசுவாசிகளோடு இணைந்து உரோம் நேரம் இரவு 9 மணிக்கு ஒவ்வொரு நாளும் புனித பேதுரு பேராலய வளாகத்தில் கூடி ஜெபமாலை செபித்து வருகின்றனர். கடந்த 06.03.25 வியாழன் இரவு இந்த செபமாலைக்கு முன் திருத்தந்தை அவர் குரலில் இஸ்பானிய மொழியில் வழங்கிய நன்றிச் செய்தி வளாகத்தில் ஒலிபரப்பப்பட்டது.

*(வசந், யாழ்ப்பாணம்)*




**கேள்வி: சில நாட்களுக்குமுன் 'அல்ஜசீரா' தொலைக்காட்சி ஊடகவியலாளர் மெக்கிகசன் அவர்களுக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் இடையில் நடைபெற்ற 'கெற் ரு கெற்' நிகழ்ச்சியின் நேர் காணலைப் பற்றிய அதிர்வலைகள் உலகம் பூராகவும் எழுந்திருக்கின்றது. இந்நேர்காணலைப் பார்த்தீர்களா? இதுபற்றிய தங்களின் கருத்து என்ன?**

பதில்: வசந், நேர்காணலை முழுமையாகத் திரும்பத் திரும்பப் பார்த்தேன். ரணில் விக்கிரமசிங்கவைக் குறித்து 'தேசத்தின் குரல்' ஒருதடவை குறிப்பிட்ட அடை மொழி மிகச் சரியான கணிப்பே! ரணில் விக்கிரம சிங்கவை முதன்முதலாகத் திக்குமுக்காட வைத்த ஒரு நேர்காணலாக இது இருந்தது. மிக நாகரிகமாகக் கதைப்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தி எப்படி-யெல்லாம் உண்மைகளை மறைத்துப் பொய்களைப் புது வகையாகக் கூறமுடியுமோ அவ்வாறே கேள்வி களுக்கான பதில்களைக் கூறியிருந்தார் ரணில் விக் கிரமசிங்க. இதில் முக்கியமாக, ரணில் விக்கிரமசிங்க, தாங்கள் ஒரு வன்முறையற்ற தேசி யத்தை அல்லது மக்கள் குழுமத்தைச் சேர்ந்தவர் என்றும், மேலும் தாங்கள் 'கிமாலயன்' பண்பாட்டைக் கொண்டவர்கள் என்றும் கூறினார். 'கிமாலயன் பண்பாடு' என்பது, ஒரு பிராந்தியத்தின் பல்லினம், புவியியல், வரலாறு போன்றவற்றைப் பிரதிபலிக்கும் பல்வேறுபட்ட மரபுகளையும் நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் கொண்ட ஒரு பண்பாட்டைத்தான் 'கிமாலயன்' பண்பாடு குறிக்கிறது. அப்பண்பாட்டைக் கொண்டவர்கள் தாங்கள் என்றும் கூறி நாட்டில் நடந்த போருக்கான ஆதாரத்தையே பேட்டி காண்பவரிடம் காட்டும்படி கேட்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க. இப்படிப்பட்டவரைத்தான் எமது பிரதிநிதிகள் தலையில் தூக்கி வை-

# ஏன் கேள்விக்கென்ன பதில்

**அருட்பணி செ. அன்புராசா,அமதி**

த்துக் கொண்டாடினார்கள் - கொண்டாடுகிறார்கள். இவ்விடயத்தில் இந்நேர்காணல் குறித்து பலர் முகநூலில் பதிவுகளை எழுதிவரும் நிலையில், பாலசிங்கம் கஜிபன் எழுதிய பதிவை, நம் மக்கள் பிரதிநிதிகள் குறித்து மீள்பார்வையைச் செய்ய உதவியாக இருக்கும் என்பதால் தருகிறேன். பாலசிங்கம் கஜிபன் எழுதுகையில், "அல்ஜசீரா ஊடகவியலாளர் மெக்கிகசன் இடம் இலங்கையில் நடந்த இனப்படுகொலை தொடர்பில் காணப்பட்ட கோவமும் நியாயமான கேள்விகளும் போர்க்குற்றத்திற்கு இலக்கான தமிழ்மக்களின் ஆதங்கத்தின் வெளிப்பாடு களும் ரணில் விக்கிரமசிங்கவை மீட்பர் போல் காட்டி எங்களிடம் கொண்டுவந்து விற்ற கூட்டமைப்பின் - தமிழரசுக்கட்சியின் எந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமோ அல்லது இறுதியாக 'பார் லைசன்ஸ்'க்காகத் தமிழ் தேசியத்தை விற்ற விக்கினேஸ்வரனுக்கோ கூட வந்ததில்லை என்பதுதான் என் கவலை" என்கிறார். மாகாணசபைத் தேர்தல் வருகிறது! நம் மக்கள் பிரதிநிதிகள் பற்றிச் 'சீரியஸ்'சாகச் சிந்திப்போம்.

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கே: சிலர் எவ்வளவுதான் படித்தாலும் எத்தனை இடங்களுக்குச் சென்று எத்த னையோ அனுபவங்களைப் பெற்றாலும் அவர்களின் சில சில்லறைத்தனங்கள் மாறுவதில்லை! என்ன காரணம்?**

**ப:** அன்ரன், அவை எப்படி மாறும்! 'நாடு கடந்தாலும் நாய்க் குணம் போகாது' என்று உங்களுக்குத் தெரியாதா!?

*(வேந்தன், யாழ்ப்பாணம்)*

**கே: நன்கு படித்துப் பட்டங்கள் பெற்றவர்கள்கூட முட்டாள்தனமாகச் சிலவேளை களில் சிந்திக்கின்றார்கள், செயற்படுகின்றார்கள்! இவ்வாறான அவர்களின் சிந்த னையும் செயற்பாடுகளும் இவர்கள் உண்மையில் படித்தவர்களா என்ற கேள்வியை எழுப்புகின்றது! உண்மையில் இவர்கள் படித்தவர்களா?**

**ப:** தம்பி வேந்தன், "கல்வியைப் புத்திசாலித்தனத்துடன் ஒருபோதும் குழப்ப வேண்டாம். காரணம் நீங்கள் 'முனைவர்' பட்டம் எடுத்த பின்பும்கூட முட்டாள்களாக இருக்கலாம்!" என்ற ரிச்சட் ஃபேயன்மேன் என்பவரின் கூற்றுத்தான் உங்கள் கேள்விக்கான விடையாக எனக் குத் தெரிகிறது வேந்தன்!

*(அழகு, கொழும்பு)*

**கே: 'பியூட்டி பார்லர்'க்குச் (அழகுபடுத்தும் நிலையங்கள்) செல்லும் பெண்கள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

**ப:** அழகு, இதுபற்றி ஒருவன் குறிப்பிட்டிருந்தான்: "பழைய பாத்திரங்களுக்கு ஈயம் பூசும் கடைக்குப் புதிய பெயர்தான் 'பியூட்டி பார்லர்'" என்று! அழகு, இதுக்கு மேல நான் என்னத்தச் சொல்ல அழகு!

## விண்ணகப் பிறப்பின் 6ம் ஆண்டு நினைவுகளில்

பிறப்பு 24 . 10 . 1966



இறப்பு 09 . 03 . 2019

### அமரர் யோசவ் அன்ரன் லியோ அன்ரசன்

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோ.14:8)

எம் அன்பான அப்பா - உங்கள்
விண்ணகப் பிறப்பின் ஆறு வருடங்களில் அப்பா செய்வதை அடுத்தவர்
செய்யார் என்று உமது இழப்பு எமக்கு உணர்த்திடினும் இறையாசீரால்
பிள்ளைகளின் கல்வி வாழ்வு சிறப்புற்றது போல் - இல்லற வாழ்வும்
சிறப்புற இறைவனிடம் பரிந்து பேசுங்கள். உங்களின் ஆன்மா
ஈடேற்றத்திற்காக மன்றாடுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 11.03.2025 அன்று மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை 5.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

நல்லாயன் வீதி, சில்லாலை.

## நல்லாயன் நிதியம் - 2024
## பங்குகளில் சேர்க்கப்பட்ட நிதி விபரம்

| இல. | பங்கு | |
|---|---|---|
| | **யாழ்ப்பாண மறைக்கோட்டம்** | |
| 1. | பேராலயம் | 57,000.00 |
| 2 | குருநகர் | 72,000.00 |
| 3 | அடைக்கல அன்னை ஆலயம் | 25,000.00 |
| 4 | பாசையூர் | 34,800.00 |
| 5 | நாவாந்துறை | 61,750.00 |
| 6 | அஞ்சனந்தாழ்வு | 3,840.00 |
| 7 | பண்டியன்தாழ்வு | 6,000.00 |
| 8 | கொழும்புத்துறை | 15,000.00 |
| 9 | கொய்யாத்தோட்டம் | 2,800.00 |
| 10 | திருநெல்வேலி | 4,680.00 |
| 11 | கோப்பாய் | 5,000.00 |
| 12 | சுண்டிக்குளி | 23,510.00 |
| 13 | நல்லூர் | 5,525.00 |
| 14 | மணியந்தோட்டம் | 7,320.00 |
| 15 | புனித திரேசாள் ஆலயம் - றக்கா வீதி | 10,100.00 |
| | **தீவக மறைக்கோட்டம்** | |
| 1 | மண்டைதீவு | 14,090.00 |
| 2 | கரம்பன் | 7,000.00 |
| 3 | நாரந்தனை | 4,000.00 |
| 4 | ஊர்காவற்துறை | 20,250.00 |
| 5 | நெடுந்தீவு | 59,000.00 |
| 6 | சாட்டி - வெண்புரவிநகர் | 40,750.00 |
| 7 | புங்குடுதீவு | 3,000.00 |
| 8 | எழுவைதீவு | 2,500.00 |
| 9 | அல்லைப்பிட்டி | 4,300.00 |
| | **இளவாலை மறைக்கோட்டம்** | |
| 1 | இளவாலை - புனித அன்னம்மாள் ஆலயம் | 5,900.00 |
| 2 | இளவாலை - புனித யாகப்பர் ஆலயம் | 14,000.00 |
| 3 | மாதகல் | 27,020.00 |
| 4 | சில்லாலை | 10,000.00 |
| 5 | பண்டத்தரிப்பு | 8,120.00 |
| 6 | விளான் | 9,000.00 |
| 7 | மானிப்பாய் | 45,000.00 |
| 8 | மாரீசன்கூடல் | 8,500.00 |
| 9 | உரும்பிராய் | 24,000.00 |
| 10 | ஆனைக்கோட்டை | 161,000.00 |
| 11 | குளமங்கால் | 11,000.00 |
| 12 | மல்வம் | 26,000.00 |
| 13 | சுன்னாகம் | 5,000.00 |
| 14 | நவாலி | 97,000.00 |
| 15 | ஊறணி | 5,600.00 |
| | **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | |
| 1 | பருத்தித்துறை | 18,200.00 |
| 2 | தாளையடி | 13,500.00 |
| 3 | அச்சுவேலி | 45,000.00 |
| 4 | கரவெட்டி | 101,000.00 |
| 5 | மிருசுவில் | 20,000.00 |
| 6 | சாவகச்சேரி | 21,680.00 |
| 7 | மணற்காடு | 7,000.00 |
| 8 | சக்கோட்டை | 9,550.00 |
| 9 | பளை, முகமாலை | 53,500.00 |
| 10 | கட்டைக்காடு | 97,700.00 |
| 11 | ஒட்டகப்புலம் | 1,650.00 |
| | **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | |
| 1 | கிளிநொச்சி | 15,000.00 |
| 2 | வலைப்பாடு | 11,000.00 |
| 3 | உருத்திரபுரம் | 4,000.00 |
| 4 | வட்டக்கச்சி | 4,000.00 |
| 5 | அக்கராயன் | 5,000.00 |
| 6 | மல்லாவி | 3,200.00 |
| 7 | முழங்காவில் | 6,500.00 |
| 8 | குமுழமுனை | 5,200.00 |
| 9 | பூநகரி | 5,000.00 |
| 10 | பரந்தன் | 13,500.00 |
| | **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | |
| 1 | முல்லைத்தீவு | 30,000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு | 13,700.00 |
| 3 | மாங்குளம் | 2,000.00 |
| 4 | இரணைப்பாலை | 15,000.00 |
| 5 | அளம்பில் | 54,500.00 |
| 6 | கூழாமுறிப்பு | 5,000.00 |
| 7 | கொக்கிளாய் | 1,800.00 |
| 8 | உடையார்கட்டு | 1,500.00 |
| 9 | தர்மபுரம் | 5,500.00 |
| 10 | உடுப்புக்குளம் | 6,610.00 |
| 11 | சிலாவத்தை | 4,380.00 |
| 12 | முகத்துவாரம் | 9,640.00 |
| | | **1,557,165.00** |

# யாழ்.மறைமாவட்ட மரியாயின்சேனை ஆச்சேஸ் விழா



யாழ்மறைமாவட்ட மரியாயின்சேனை ஆச்சேஸ் விழா கடந்த 02.03.2025 யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. இதன் ஆரம்ப நிகழ்வாக சேனையார் தங்களின் கொடிகளுடன் புனித வாசலினூடாக யூபிலிப்பாடலை இசைத்த வண்ணம் ஆலயத்தினுள் நுழைந்தனர் பின்னர் ஆரம்பச் செபமும் செபமாலையும் இடம்பெற்றது தொடர்ந்து அருட்பணி ஜீவாபோல் அடிகளார் திருவுரை நிகழ்த்தினார். தொடர்ந்து சேனையாரின் அர்ப்பணநிகழ்வும் அதனைத்தொடர்ந்து யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது இதில் யாழ் கொமிசிய ஆன்ம இயக்குநர் அருட்பணியாளர் ஆர்.ப. சகாயநாயகம் அடிகளாரும் இணைந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் 1500 இற்கும் அதிகமான சேனையார் கலந்துகொண்டு தமது சேனை வாக்குறுதியைப் புதுப்பித்தனர்

# மறையாசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட மறையாசிரியர்களுக்கான ஒரு மாதகால வதிவிடப்பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது. மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில், யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் திருப்பலியும் தொடர்ந்து மறைக்கல்வி நிலைய கேட்போர்கூடத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் வதிவிடப் பயிற்சியை நிறைவு செய்த மறையாசிரியர்களின் கலைநிகழ்வுகளும் அகவெளி குடும்ப நல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்களின் சிறப்புரையும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து பயிற்சியை நிறைவுசெய்த யாழ். மறை மாவட்டத்தின் ஆறு மறைக்கோட்டங்களை சேர்ந்த 26 மறை யாசிரியர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

# பாண்டியன்தாழ்வுப் பங்கில் சிறப்புக்கருத்தமர்வு



பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான சிறப்புக்கருத்தமர்வு கடந்த 02ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை நேசராஜா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இக்கருத்தமர்வில் திருவுளப்பணியாளர் சபை அருட்தந்தை டெவின் அவர்கள் வளவாளராகக் கலந்து இளையோரை நெறிப்படுத்தினார்.

# இயற்கைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு



கிளிநொச்சி மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் பரந்தன் பங்கு மக்களுக்காக முன்னெடுக்கப்பட்ட இயற்கைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தமர்வு கடந்த 02ஆம் திகதி பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. கழக இயக்குநர் அருட்தந்தை நியூமன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வரும், பரந்தன் பங்குத்தந்தையுமான அருட்தந்தை பெனற் அவர்களின் வழிகாட்டலில் **"இயற்கையைப் பாதுகாப்போம்"** என்னும் கருப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. ராஜ் வினோத் அவர்கள் வளவாளராகக் கலந்து பங்குமக்களை நெறிப் படுத்தியிருந்தார். தொடர்ந்து, கிளிநொச்சி, அமல மரித்தியாகிகளின் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் ஆனுசரணையில் வழங்கப்பட்ட பயன்தரு மரக்கன்றுகள் ஆலய வளாகத்தினுள் நாட்டிவைக்கப்பட்டதுடன் இந்நிகழ்வில் 60வரையானவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

# 25 வருடங்களைப் பூர்த்தி செய்த 75 தம்பதியினர் கௌரவிப்பு



திருமண பந்தத்தில் இணைந்து 25 வருடங்களை ப்பூர்த்திசெய்த தம்பதியினருக்காக வட்டக்கச்சி பங்கில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 1ம் திகதி வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜித் சுலக்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம் அவர்கள் தலைமையில் சிறப்புத் திருப்பலியும் தொடர்ந்து தம்பதியினருக்கான கௌரவிப்புக்கள், மகிழ்வூட்டும் நிகழ்வுகளுடன் அவர்களின் இல்லறவாழ்வு அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் 75 தம்பதிகள் கௌரவிக்கப்பட்டதுடன் கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற், மற்றும் அருட்தந்தையர்கள், தம்பதியினரின் பிள்ளைகள், உறவினர்களென பலரும் கலந்துகொண்டனர்.

# "வெள்ளியில் ஞாயிறு" பிரதி வழங்கும் நிகழ்வு



திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய கடந்த 5 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு, திருமறைக் கலாமன்றத்தின் "கலைஞான சுரபி" தியான இல்லத்தில் நடைபெற்றது. திருமறைக் கலாமன்றத்தின் ஊடக இணைப்பாளர் கி. செல்மர் எமில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ .ஜெபரட்ணம் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கியதுடன் ஆற்றுகையின் நெறியாளர் யோ. யோண்சன் ராஜ்குமார் மற்றும் பங்கேற்கவுள்ள கலைஞர்கள், முக்கிய பொறுப்புக்களை ஆற்றவுள்ளோருக்கான பிரதிகளை வழங்கி வைதார். இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் ஏப்பிரல் மாதம் 10ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களுக்கு " வெள்ளியில் ஞாயிறு" என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது."வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடுகளின் நாடகம் முதன் முதலாக 2010 ஆம் ஆண்டிலும், அதனைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது.தற்போது ஏழு ஆண் டுகளின் பின்னர் மீண்டும் மேடை யேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

## மூத்த கலைஞர் இறையடி சேர்ந்தார்



நாவாந்துறையைச் சேர்ந்த ஈழத்தின் புகழ்பெற்ற மெல்லிசைப்பாடகரும், யாழ். திருமறைக்கலாமன்றத்தின் மூத்த கலைஞரும் யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான கலைஞர் **திரு. நீக்கிலஸ் மரியதாஸ் பாலச் சந்திரன்** அவர்கள் கடந்த 04 ஆம் திகதி இறைவனடி சேர்ந்துள்ளார்.

கலைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக இவர் பல விருதுகளுடன் திருமறைக்கலாமன்ற உயர் விருதான "கலை ஞானபூரணன்" விருதினையும் பெற்றுக் கொண்டுள்ளார் எனபது கூறிப்பிடத்தக்கது.

## எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் காலமானார்



ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் **கே.ஆர்.டேவிட்** அவர்கள் பெப்ரவரி 24ம் திகதி காலமானார். கே.ஆர்.டேவிட் அவர்கள் பல சிறு கதைத் தொகுதி, குறுநாவல்கள், நாவல்கள் அடங்கலாகப் பல நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் தமது எழுத்தாற்றலால் கடந்த அறுபது ஆண்டுகாலமாக நலிவுற்றோரின் குரலாய்ப் பல படைப்புக்களைப் படைத்துப் பல அரச விருதுகளையும் பெற்றுள்ளார்.

# ஏழாலை இசிதோர் முன்பள்ளி கால்கோள் விழா



சுன்னாகம் பங்கிற்குட்பட்ட ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளியில் முன்னெடுக்கப்பட்ட கால்கோள் விழா 7ஆம் திகதி நடைபெற்றது. முன்பள்ளிப் போசகர் அருட்தந்தை நிக்ஸன் கொலின் அவர்களின் தலைமையில் முன்பள்ளி பொறுப்பாசிரியரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்பள்ளியில் புதிதாக இணைந்துகொண்ட 15 மாணவர்களையும் அருட்தந்தை நிக்ஸன் கொலின் அவர்கள் ஆசீர்வதித்து அவர்களுக்கான கல்வி செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

# எழுவைதீவுப் பங்கில் இளையோருக்கான தலைமைத்துவப் பயிற்சி



எழுவைதீவுப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான தலைமைத்துவப் பயிற்சி கடந்த 02ஆம் திகதி பங்குத்தந்தை அருட்தந்தை யூட் கமில்ரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் யாழ். மாவட்ட செயலகத்தின் அனுசரணையில் நடைபெற்றது இந்நிகழ்வில் திரு. ஶ்ரீபவான் அவர்கள் வளவாளராக கலந்து இளையோரை வழிப்படுத்தியதுடன் யாழ். மாவட்ட செயலக கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் திருமதி யாழினி மற்றும் சர்மினி ஆகியோரும் இந்நிகழ்வில் இணைந்துகொண்டனர். இந்நிகழ்வில் 50 வரையான இளையோர் பங்குபற்றி பயனடைந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு பங்குனி மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.